
# வேதாகமம் நமக்கு எப்படி கிடைத்தது
# மற்றும்
# நீங்கள் ஏன் அதை நம்பவேண்டும்

# வேதாகமம் நமக்கு எப்படி கிடைத்தது

## மற்றும்

# நீங்கள் ஏன் அதை நம்பவேண்டும்



ஆக்கியோன்

மைக்டேரியோபெரொ

புத்தகங்கள் கிடைக்குமிடம்
www.joberypress.com

# முகவுரை

"வேதாகமம் நமக்கு எப்படி கிடைத்தது" என்ற இப்புத்தகம் உங்களை கவர்ந்திழுப்பதாக நீங்கள் உணர முடியும். இது கேள்விகளுக்கு பதில் கொடுக்கிறது, விசுவாசத்தை செழிக்க செய்கிறது. எதிர் பேசுவோரின் வாயை அடைக்கிறது. மேலும் வேதாகமத்தை முழுவதுமாக நம்புவதற்கு முழுமையான விளக்கத்தை கொடுக்கின்றன. இந்த புத்தகத்தின் உண்மை இதனுடைய ஒருமை பாட்டில் இருக்கிறது. இது சுருங்கக் கூறுவதின் விளைவாக அமைகிறது. மேலும் இது உறுதியாகவும் உள்ளது.

நான் இந்த புத்தகத்தை முழுமனதோடு பரிந்துரை செய்கின்றேன். மேலும் நீங்கள் இதை படிப்பதன் மூலம் ஆச்சரியத்தில் மூழ்கடிக்கப்படுவீர்கள் என்று நம்புகிறேன். இதைப்படியுங்கள் உங்கள் நண்பர்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள். கிறிஸ்துவ விசுவாசமானது மிக நிலையானதும் நம்பத்தகுந்ததுமாக உள்ளது என்பதை அறிந்துக்கொள்ளுங்கள் .

இவண்

**டக்ளஸ் ஜேக்கோபி.**

**மார்ச் 2002.**

# முன்னுரை

## இதோ! வேதாகமம்

வேதாகமமானது கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக மிகவும் விமர்சிக்கப்பட்டுள்ளது. வல்லுனர்களும் பேராசிரியர்களும் இந்த ஆவணங்கள் நம்பப்படத்தக்கனவாயிலலை என்று கூறினர். வேதாகமத்தின் ஆசிரியர்கள் துல்லியமாக இல்லை என்றும் வரும் கதாபாத்திரங்கள் கட்டுக்கதைகள் என்றும் கூறினர். தாவீது ராஜாவின் வரலாறு ஒரு "குளிர் காயும்போது" பேசப்படும் கட்டுக்கதை என்று கூறினர். மற்றவர்கள் இயேசுகிறிஸ்துவின் வரலாறு அது நடந்து முடிந்து பல நூற்றாண்டுகளுக்கு பிறகு எழுதப்பட்டது என்று கூறினர் இன்னும் சிலர் வேதாகமம் என்பது ஒன்றுக்கும் உதவாத பேதமை என்றும் பாரம்பரியங்கள் மூலமாக நூற்றாண்டுகளை கடந்த வந்துள்ளது என்றும் கூறுகின்றனர். மேலும் இது வரலாற்றுப் பூர்வமாக ஒரு பலமிழந்த ஆவணம் என்றும் அதன் மதிப்பு ஈசோப்பின் கதைகளுக்கும், கிரேக்க மாயக்கதைகளுக்கும் இடைப்பட்டது என்றும் கணிக்கின்றனர்.

வேதாகமம் வரலாற்றுப் பூர்வமானது என்பதை 1700–கரும் 1800–க்கும் இடைப்பட்ட காலத்தில் வசித்த பேராசிரியர்கள் மறுத்தனர். வேதாகம வசனங்கள் மிகவும் காலம் தாழ்த்தி எழுதப்பட்டவைகள் என்றும் அதனால் அவைகளை சரியானவைகள் என்று ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் மறுத்தனர். மேலும் திறனாய்வாளர்கள் சில ஆணிகளை வேதாகமத்தின் சவப்பெட்டியில் அறைய தங்கள் சத்தியல்களை ஓங்கி அடித்தனர்.

திறனாய்வாளர்களில் மிகவும் முக்கியமானவர் ஜெர்மனி நாட்டை சார்ந்த F.C பார் என்பவர். இவர் மற்ற வேதாகம நிபுணர்களோடு சேர்ந்து வேதாகமத்தின் உண்மைகளை ஒரு தெளிவற்ற கருத்துக்களின் தொகுப்பு கருத்து என வெளியிட்டார். மேலும் இவர்கள் புதிய ஏற்பாடனாது கி.பி 200 ஆம் வருடத்தில் எழுதப்பட்டது என்றும் அது நம்பப்படுவதற்கு சாத்தியமற்றது என்றும் மேலும் அது ஒரு கட்டுக்கதை என்றும் கூறினர்.

இவர்களுடைய கொள்கைகள் எல்லாம் இன்றும் புழக்கத்தில் இருந்தாலும் இவைகள் தவறானவைகள் என்று இறுதியாக நிரூபிக்கப்பட்டுள்ளன. மிகவும் தவறானவைகள் என்று வரலாற்று அகழ்வாராச்சிகள் மேலும் ஓலைச்சுவடிகள் முதலியவை இவைகளை அடித்து நொறுக்கிவிட்டன. ஆனால் இப்போது வேதாகமம் வரலாற்று பூர்வமாக துல்லியமானது என்பது தெளிவாக உள்ளது. இது கலாச்சார பூர்வமாகவும் சரியானது. பதிவேடுகள் யாவும் ஆசிரியர்களின் சரியான

வார்த்தைகளை தருகின்றன. சத்தியத்தின் படி வேதாகம புத்தகங்களில் எந்தவிதமான குறைபாடுகளும் இல்லை. இந்த கருத்துகளை சூழ்ந்துள்ள புகைமண்டலத்தை நீக்கி வேதாகமம் இன்றும் நிலைத்து நிற்கின்றது. இந்த புத்தகத்தை விசுவாசிப்பது உங்கள் தனிப்பட்ட முடிவு. ஆனால், வேதாகமம் என்பது அப்போஸ்தலர்களின் சாட்சிகளின் சரியான தொகுப்பு. இதை மிகச்சிலரே இன்றைக்கு மறுதளிப்பர்.

இந்த வேதாகம வசனங்களை நிலைநிறுத்தக்கூடிய சாட்சிகளின் ஆழத்தை உணராத சீஷர்களுக்கு இதைக்குறித்து அனேகந்தரம் நான் பேசியிருக்கிறேன். இன்றைக்கும் நிலைத்திருக்கின்ற சாதகமான சாட்சிகளை மாணவர்களும், பெற்றோர்களும், வேதாகமத்தை வாசிப்பவர்களும் உணராமல் இருக்கின்றனர். தொடர்ந்து வரும் சில அதிகாரங்களில் வேதாகமம் எப்படி கிடைத்து என்பதை மட்டும் ஆராயாமல், வேதாகமம் எந்த அளவிற்கு நம்பிக்கைக்கு உரிய புத்தகம் என்பதையும் பார்க்க போகின்றோம். வேதாகமத்தை விலை மதிப்புள்ளதாக்கும் மலைபோன்ற சாட்சிகளையும், ஆராய்ச்சிகளையும் பார்க்கும் போது நீங்கள் ஸ்தம்பித்து விடுவீர்கள். உங்கள் விசுவாசம் பெலப்படுத்தப்படும் என்று நான் அறிவேன். திறனாய்வார்களின் நம்பிக்கையைவிட வேதாகமம் என்பது மிகவும் உறுதியானது என்பதை தானே நிரூபிப்பதில் அது மிகவும் பொறுமையாகவும் எவ்விதம் அனல் மூட்டுதலும் இல்லாமல் நிரூபிக்க வல்லமை உடையது.

எழுதப்பட்ட புத்தகங்களிலே வேதாகமம் என்பது மிகவும் பெரியது என்பது எவ்வளவும் சந்தேகத்திற்குரியது அல்ல. இந்த உண்மைகளை கவனித்து பாருங்கள்...

- வேதாகமம் 1500 வருடங்களாக எழுதப்பட்டது. (1400 BC to 80 AD) 40 தலைமுறைகளை கடந்து வந்தது.
- மூன்று வித்தியாசமான கண்டங்களில், மூன்று மொழிகளில் எழுதப்பட்டது (எபிரெயு, அராமிக், இலத்தீன்)
- வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளிலும் இருந்த ராஜாக்கள், குடிமக்கள், தத்துவஞானிகள், மீனவர்கள், தலைவர்கள் மற்றும் வல்லுனர்களாகிய 50 ஆசிரியர்களால் வேதாகமம் எழுதப்பட்டது.
- பல நூற்றாண்டுகளாக தொடர்ந்து நிறைவேற்றப்பட்ட பல நூற்றுக்கணக்கான தீர்க்கதரிசனங்களை உள்ளடக்கியுள்ளது.
- வரலாற்றுப் பூர்வமாகவும், கலாச்சாரத்தின் படியும், முற்றுமாக சரியானது பல நூற்றாண்டுகளில் வாழ்ந்த இந்த ஆசிரியர்கள் அனைவரும் ஒரே விஷயத்தை குறித்து ஒருமனப்பட்டு இருந்தனர். சத்தியம், நோக்கம், ஊழியம், தேவன், மனிதன், உண்மை, பாவம், நீதி, தொடக்கம் மற்றும் முடிவு ஆகிய எல்லா விஷயங்களிலும் வேதாகமம் ஒருமித்த கருத்தை உடையதாக இருக்கின்றது.





உங்கள் பட்டணத்திலுள்ள 50 மதத்தலைவர்களை ஒன்று கூட்டி மேற்கூறிய தலைப்புகளில் ஏதேனும் ஒன்றை ஒத்துப் பேச செய்யுங்கள்.

- அறிவியலைச் சார்ந்த பொருட்கள் கலபமான வடிவத்திலும் சரியான வார்த்தைகளிலும் விளக்கப்பட்டுள்ளன. பொருளற்ற கதைகள் ஏதுமில்லை (பாபிலோனின நாட்டின் கடவுள்கள் வானத்தில் சண்டைபோட்டுக் கொண்டதால் ஒரு கடவுளின் உடல் பாகங்களிலிருந்து பூமி உருவானது என்கிற கதையை ஒப்பிட்டு பார்க்கவும்.
- ஒரு காலத்தில் நம் மூதாதையர்கள் மொத்தமாக 1100 நட்சத்திரங்கள் இருந்ததாக நினைத்தனர். எரேமியா தீர்க்கத்தரிசி BC 600-ல் எரேமியா புத்தகத்தை எழுதும் போது எரேமியா 33:22-ல் எண்ணமுடியாத நட்சத்திரங்கள் என்று குறிப்பிடுகின்றார்.
- நோவா பேழையின் அளவும் மிகவும் ஆச்சிரியமானது. அதன் அளவு 300x50x30 முழம். இன்றைக்கு இருக்கும் கப்பல்களின் அளவை எப்படி பொறியாளர்கள் தீர்மாணிக்கின்றார்களோ அதேப் போல் இந்த அளவு உள்ளது. இதை அவர்கள் அன்று எப்படி அறிந்திருந்தார்கள்?
- ஐக்கிய வேதாகம சங்கம் மட்டும் ஒரு நாளுக்கு 110,000-க்கும் மேற்பட்ட வேதாகங்களை விலைக்கும், இலவசமாகவும் கொடுத்து வருகின்றனர்.
- பத்து பழைய தொகுப்புகளை காட்டிலும் வேதாகமமானது சிறந்த நிரூபிக்கப்பட்ட பதிவேடுகளை கொண்டதாக உள்ளது. ஷேக்ஸ்பியரின் புத்தகங்களை விட சிறந்த முறையில் அங்கிகாரம் செய்யப்பட்டுள்ளது.
- 1778-ல் மரித்துப் போன வால்டேர் என்ற பிரான்சு நாட்டை சார்ந்த கடவுள் இல்லை என்று நம்பக்கூடிய மனிதன் கிறிஸ்துவ மார்க்கம் 100 வருடங்களில் அழிந்து விடும் என்று கூறினார் ஆனால் உண்மையாகவே வால்டேர் ஒழிந்து போனார், கிறிஸ்தவ மார்க்கமோ தழைத்தது. 50 வருடங்களில் ஜெனிவா வேதாகமக் கழகம் வால்டேரின் வீட்டையும் வேதாகமத்தை குவியல் குவியலாக வெளியிடும் படி அவனுடைய அச்சகத்தையும் பயன்படுத்தினர்.

எனக்கு தெரியும். எனக்கு தெரியும். இந்தகாரியங்கள் எல்லாம் வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பதை நிரூபிக்கவில்லை. இவைகள் எல்லாம் வேதாகமம் எல்லா புத்தகங்களிலும் ஒரு வித்தியாசமான புத்தகம் என்று நிரூபிக்கின்றன. நிச்சயமாக இது உங்கள் கவனத்தை கவரக்கூடியஒன்று.

# அத்தியாயம் - 1

## இயேசு! இவர் கட்டுக்கதையா ?

'இயேசு' ஒரு வரலாற்றுபூர்வமானவர் என்பது ஒரு புரளி, பொய் யான செய்தி என்பதோடு கூட தொடங்குவோம் இயேசு ஒரு கட்டுக்கதை என்ற பழையவாக்கு வாதம் இன்றும் பல இடங்களில் பரவலாக பேசப்படுகின்றது. இதுவும் ராபின் உட் மற்றும் சாண்டா கிளாஸ் போன்றவர்களின் கதையைப் போன்றது என்று பலர் கருதுகின்றனர். பிற்கால ஆசிரியர்களின் கண்டுபிடிப்பு "இயேசு" என்று பலர் நம்புகின்றனர். மேலும் அப்படிப்பட்டவர் எப்போதும் வாழவில்லை என்று கூறுகின்றனர், இந்தக் கூற்று தெளிவான ஒரு தவறான செய்தி என்றாலும் நாம் துரிதமாக இதற்கு நேராக நம் கவனத்தை திருப்புவோமாக இயேசு ஒரு சரித்திர பூர்வமான புருஷர் இல்லை என்பதை நிரூபிக்கின்ற எந்த ஒரு வல்லுனரையும் கண்டு பிடிப்பது மிகவும் கடினம் என்பதை தயவு செய்து கவனத்தில் கொள்ளுங்கள்.

'வரலாற்றின் தொகுப்பு' என்ற தன் புத்தகத்தில் கடவுளே இல்லை என்று கூறிய H.G. வெய்ஸ் எழுதுகிறார். "ஒருவர் ஒத்துக் கொள்ள வேண்டும், இங்கே ஒரு மனிதன் இருக்கிறார், இந்த கதையின் பகுதி ஒரு நாளும் ஒரு கண்டுபிடிப்பு அல்ல'

வரலாறு மற்றும் தத்துவ பேராசிரியராக கொலம்பியா பல்கலைகழகத்தின் பணியாற்றி வில் டியூரண்ட் என்பவர் அவர் எழுதிய "நம் நாகரீகத்தின் வரலாறு" என்ற புத்தகத்தில், இயேசு மாவீரன் அலெக்சாண்டர் மற்றும் சீசரைப் போன்ற வரலாற்று மனிதர்களுள் ஒருவரானவர் என்று இரண்டு அத்தியாயங்கள் எழுதியுள்ளார்.

"பிரிட்டானிகா" தகவல் களஞ்சியம் என்ற புத்தகம் 20,000 வார்த்தைகள் மூலம் இயேசுவை விளக்கியுள்ளது. அரிஸ்டாடில், சீசரோ, அலெக்சாண்டர், ஜுலியஸ் சீசர், புத்தர், கன்பியூசியஸ், முகமது மற்றும் நெப்பொலியன் போன்றவர்களை குறித்து எழுதப்பட்ட வார்த்தைகளைக் காட்டிலும் இயேசுவைப் பற்றி எழுதப்பட்டவைகள் அதிகம்.

இயேசு உண்மையாகவே வாழ்ந்த நபர் என்பதை நிரூபிப்பதற்கு இதைப் போன்ற





மேதைகளின் அனேக நிரூபணங்கள் உள்ளன. அவைகள் என்ன? அவைகள் இயேசு வாழ்ந்த காலத்தின் சம காலத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களின் கருத்துக்கள்.

தேல்லஸ் என்ற சமாரிய வரலாற்று ஆசிரியர் கி.பி. 52-ல் கிறிஸ்துவை பற்றி எழுதியுள்ளார் இயேசு சிலுவையில் அறையப்பட்ட அன்று சம்பந்தப்பட்ட ஒரு விளக்கத்தை கொடுக்கும்போது தேல்லஸ் இயேசுவைப் பற்றியும் அவருடைய மரணத்தைப் பற்றியும் எழுதியுள்ளார்.

ட்ரோகன் (Trojan war) நடைபெற்ற காலத்திலிருந்து கி.பி 52-ம் ஆண்டு வரையிலுள்ள காலங்களில் இருந்த மத்யதரைக்கடல் உலகத்தை குறித்து எழுதும் போது தேல்லஸ் இயேசுவைக் குறித்து எழுதுகின்றார்.இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது ஏற்பட்ட இருட்டை தேல்லஸ் அமாவசை போன்றது என்று மிகவும் சுவாரஸ்யமாக விளக்கியுள்ளார்.

அன்றைக்கு ஏற்பட்ட அந்தகாரம் உலகம் ஏற்பட்ட நாள்முதல் ஏற்படவில்லை. என்று தேல்லஸ் குறிப்பிட்டது மிகவும் முக்கியமாக கருதப்பட வேண்டிய ஒன்று. அந்த அந்தகாரத்தைக் குறித்து விளக்கி சொல்ல முற்பட்டார். மேலும் இயேசு ஒரு உண்மையான வரலாற்று பூர்வமான நபர் என்பதை உறுதிப்படுத்தினார்.

கி.பி.112 ஆம் ஆண்டில் தோன்றி எகார் நேடியிஸ் டேசிடஸ் என்ற ரோமனிய வரலாற்று ஆசிரியார் தன்னுடைய 'அனால்ஸ்' என்ற புத்தகத்தின் இயேசுவைப் குறித்து எழுதி உள்ளார். நீரோ மன்னனால் துன்புறுத்தப்பட்ட விசுவாசிகளைக் குறித்தும் கிறிஸ்துவைக் குறித்தும் கிறிஸ்துவர்களையும் குறித்தும் அவர்கள் உயிரோடு எரிக்கப்பட்டதைக் குறித்தும் இவர் எழுதி உள்ளார் "கிறிஸ்டஸ் என்ற லத்தின் வார்த்தை கிறிஸ்து என்பதன் முலவார்த்தை என்றும் கிறிஸதுவர்கள் என்ற வார்த்தைக்கு அடிப்டையானது என்றும் கிறிஸ்து பொந்தியு பிலாத்து வினால் தண்டிக்கப்பட்டு கொல்லப்பட்டார் என்றும் எழுதியுள்ளார்.

கி.பி.120 ஆண்டில் ஹேர்ட்ரியன் என்ற சக்ரவர்த்தியின் முதன்மை செயலாலராக இருந்த கேயஸ் சியுடோனியிஸ் ட்ராள்க்கிலஸ் (Gaius Suetonius Tranquillas) என்பவர் எழுதும் போழுது கெரஸ்ட்ரஸ் (Chrestusi) என்பவரின் உந்துதலின் பேரில் யூதர்கள் தொடர்ந்து தொந்தரவு செய்த படியினால் அந்த யுதர்களை அவன் நகரத்திற்குப் புரம்பாக்கிணான் என்று. குறிப்பிட்டுள்ளார். (கிரஸ்ட்டஸ்) கிறிஸ்து என்ற வார்த்தையின் வேறுப்பட்ட சொல் வடிவம்ஆகும்.

ரோம்நகரத்தில் கி.பி 49 ஆம் ஆண்டில் யூதர்களின் இனத்தில் ஏற்பட்ட இனக் கலவரங்களை சியூடோனியஸ் மிகவும் தெளிவாக குறிப்பிட்டுள்ளார். இதன் விளைவாக யூதர்கள் நகரத்தை விட்டுப் புறப்பாக்கப்பட்டனர்.

யூதர்களின் வரலாற்று ஆசிரியரான பிளாவியஸ் ஜோஸ்பஸ் (Fiavius Josehpus)

என்பவர் சக்கரவத்தி வெஸ்பாசியன் (Vespasian) என்பவரிடம் கிட்டத்தட்ட (கி.பி.72ஆம் ஆண்டில்) அரசாங்க வரலாற்று ஆசிரியராக மாறினார். அவர் இயேசுவை பிலாந்து சிலுவையில் அறைந்ததையும் மற்றும் இயேசு மெசியா என்று அழைக்கப்பட்டதையும் குறிப்பிட்டுள்ளார் ஜோஸ்பஸ் (Josesohus) கி.பி. 97 ஆம் ஆண்டில் மரணமடைந்தார்.

மற்றும் பல ஒப்புமைகளும் உள்ளன. மாரா.செராப்பியன் (Mara serepion) என்பவர் கி.பி 73 ஆம் ஆண்டில் மகனுக்கு எழுதிய தனிப்பட்ட கடிதத்தில் இயேசுவைக் குறித்து குறிப்பிட்டுள்ளார். கி.பி 112 ஆம் ஆண்டில் ஆசியா மைனரில் பித்தினியா (Biltiynia) நாட்டில் வாழ்ந்த பிளைணி (poliny) என்பவர் ட்ராஜன் (Trajan) என்ற சக்கரவர்த்திக்கு கிறிஸ்துவர்களைப் பற்றியும் அவர்களுடை பக்தியைப் பற்றியும் எழுதியுள்ளார். டால்மட் (Talmud) என்பவர் இயேசுவைப் பற்றி அனேகத் தரம் குறிப்பிட்டுள்ளார். கி.பி 170–ல் லூசியன் (Lwcian) என்ற கிரேக்க பரிகாச ஆசிரியர் (Satirist) இயேசுவைக் குறித்து பரிகாசமாக எழுதியுள்ளார். இவைகள் எல்லாம் கிறிஸ்தவரல்லாதவர்கள் இயேசுவைக் குறித்து எழுதியுள்ள செய்திகள் இந்தப்பட்டியல் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவ ஆசிரியர்களின் செய்திகளில் உள்ள குறிப்புகளை உள்ளடக்கவில்லை.

இயேசுகிறிஸ்து வரலாற்றுப் பூர்வமானவர் என்பதில் எந்தவிதமான சந்தேகம் இல்லை அவர் பாலஸ்தீனத்தில் வாழ்ந்தார். அவர் ஒரு பெரிய எழுச்சியை உண்டாக்கினார். அவரது வாழ்க்கையினால் பாதிக்கப்பட்டவர்கள் அநேகர் எவர் வேண்டுமானலும் அவரை ஏற்றுக்கொள்ள மறுத்து அவர் ஆண்டவர் இல்லை என மறுதலிக்கும் உரிமை அவரவர்களுக்கு உண்டு எப்படிப்பட்ட வரலாற்று ஆசிரியராலும் அவர் இயேசுவைக் கட்டுக்கதைக் என்றும் புராணம் என்றும் கூறமுடியாது ஒவ்வொரு பகுதியாகப் பார்த்தால் அவர் (இயேசு) ஆபிராகாம் லிங்களைப் போல மகாத்மாகாந்தியை போல வரலாற்றுப் பூர்வமான நபர் என்பது உறுதியானது.





# அத்தியாயம்- 2

## புதிய ஏற்பாட்டுக்க பின்னனி

***திரணாய்வாளர்கள் என்ன சொல்லுகிருர்கள் :-***

இயேசு கிறிஸ்து வைப் பற்றிய முந்திய அத்தியாயம் வரலாற்றுப் பூர்வமானது என்பதை நிலை நிறுத்திய பின், புதிய ஏற்பாடு அவருடைய வாழ்க்கைக்கு அத்தாட்சியாக எந்த அளவிற்கு நம்பட்படத்தக்கதாக உள்ளது என்பதை சற்றே ஆய்வோம். வேதாகம வசனங்கள் எப்படி சரியானவை? அவைகள் சொல்வதை நாம் நம்பலாமா? இன்றைய கால கட்டத்தில் அநேகர் இயேசுவை ஏன் விசுவாசிக்கிறீர்கள் என்னு கேட்டால் " அவர் அற்புதங்கள் செய்ததினால்" என்று பதிலலிக்கின்றனார். ஆனார் அவர்கள் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறுதல் களையும் இயேசு உயர்ந்ததெழுந்த மிகப்பெரிய உண்மையையும் பதிலாக உரைக்கலாம்.

ஆனால் இவைகளை ஒருவர் எங்கே கற்றுக்கொள்ள முடியும்? அவருடைய அற்புதங்கள், தீர்க்க தரிசனங்கள் நிறைவேறுதல் உயிர்த்தெழுதல் ஆகிய இவைகளெல்லாம் நமக்கு ஆரம்ப செய்திகளாக புதிய ஏற்பாடு மூலம் கிடைத்தவை. புதிய ஏற்பாடே தகுதியற்றதாக கருதப்படும் போது விசுவாசிகள் திடனற்ற பனிக்கட்டியின் மேல் நிற்பவர்களில் போல ஆனார்கள். ஒரு நூற்றண்டுக்கு முன்பாக வேதாகமத்தை திறனாய்வு செய்தவர்களுக்கு இக்கருத்து அதைதாக்கப் பயன்படும் ஒரு முக்கிய கருத்தாக இருந்தது. புதிய ஏற்பாடு கி.பி 150–200 க்கும் இடைப்பட்ட வருடங்களில் கிறிஸ்துவின் மரணத்திற்கு பிறகு எழுதப்பட்டது. என்ற அடிப்படையில் பார்க்கும் போது சில வேதாகம வசனங்கள் நம்பப் படுவதற்கு தகுதியாவை அல்ல என்று கூறினர். இது கண் கண்ட காட்சிகளின் தொகுப்பு அல்ல என்று அவர்கள் விமர்சித்தன.

அது புதிய ஏற்பாட்டை ஒரு புரட்டுக் கதையாக கணிக்க ஏதுவாகிறது. அந்த எழுத்தாளர்கள் வாய்வழியாக பேசப்பட்ட பாரம்பரியங்கள் மாற்றம் அடைந்து பாதி உண்மைகளோடு கலந்து புதிய ஏற்பாடாக வந்துள்ளது என்று கருதுகின்றனார். இந்த குழப்பத்தை ஒருவர் எப்படி

தீர்க்க முடியும்? மற்றும் சிலர் இடைக்கால நூற்றாண்டுகளில் வாழ்ந்த (middie ages) சில வேலையற்ற பாதிரியர்கள் சில அற்புதகளை இதில் சேர்த்துள்ளனர் என்பது கூறுகின்றனர்.

சீஷர்கள் இதைப் குறித்து அச்சம் அடைய தேவையில்லை. காரணம் இந்த விவாதம் 50 ஆண்டுகளுக்கு முன்பாகவே ஒவ்வாதது என்று தள்ளப்பட்டது. இதற்கு நாம் சில மணித்துளிகளில் பதில் கொடுக்கலாம்.

இரண்டாவதாக ஒரு கேள்வி கொண்டு வரப்பட்டது. அவர்களுடைய விவாதத்தின் படி வேதாகம வசனங்களை எல்லாம் முதலாவது நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டவை என்று நாம் விளக்கினாலும் நாம் வைத்திருக்கும் கையெழுத்துப் பிரதிகள் எந்த அளவிற்கு நம்பத்தகுந்தவை என்பதே கேள்வி.

கையெழுத்துப் பிரதிகளின் ஆதாரங்கள் மிகவும் போதுமானது அல்ல, என்றும் அடிப்படையான கையெழுத்துப் பிரதிகள் ஆயிரம் வருடங்கள் பின்தங்கியவை என்ற கருத்துகள் அச்சமூட்டக் கூடியவையாக உள்ளன. அப்படிப் பட்ட நேரத்தில் இயேசுவின் மிது நாம் வைத்திருக்கும் விசுவாசம் சந்தேகப்பட கூடிய கேள்விக்குறிய கையெழுத்துப்பிரதிகளின் மேல் இருக்கிறது. நம்மிடையே வேதாகம கைபிரதிகள் ஆயிரம் ஆண்டுகளுக்கு பிறகு பிரதியெடுக்கப்பட்டவை என்பதைப் பார்க்கும் போது நமது விசுவாசமானது ஒரு திடனற்ற பனிக்கட்டியின் மேல் சறுக்கு விளையாட்டு விளையாடுவதுபோல் உள்ளது. நகல் எடுப்பவர்கள் கவனக் குறைவாக இருந்திருந்தால் ஆயிரம் வருடங்கள் அநேக குழப்பங்களும் தவறுகளும் ஏற்பட்டிருக்கலாம்.

இதுவே 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மேதைகளால் போதிக்கப்பட்ட கருத்தாகும் இன்றைக்கும் அநேகர் இப்படிப் பட்ட கருத்துக்களை கோடிட்டு காட்டுகின்றனர். புதிய ஏற்பாடு பிற்காலத்தில் எழுதப்பட்ட ஒரு பதிவேடு என்று அவர்கள் கூறுகின்றனார். மேலும் அவைகள்யாவும் பலவீனமானவைகள் என்றும் நம்பப்படத் தக்கவைகள் அல்ல என்றும் கூறுகின்றனர். இது விநோதமாகத் தோன்றலாம். காரணம் இந்த போதனைகளில் அநேகப் போதனைகள் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் ஐரோப்பாவிலுள்ள மிகப் பெரிய பல்கலைகழங்களின் போதிக்கப்பட்டுள்ளன. இவைகளை நீங்களும் கேள்விப்பட்டிருக்கலாம்.

வேதஆராச்சிக் கூடங்களின் இத்தகைய தாக்குதல்கள் விசுவாசத்தில் சிலரை விழ்ச்சியடைய செய்தன. சிலர் தேவையின்றி தாங்கள் விசுவாசத்தை இழந்தார்கள் கிறிஸ்துவ விசுவாச சாட்சியாக புதிய ஏற்பாடு மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறது. புதிய ஏற்பாட்டில் உள்ள சாட்சிகள் யாவும் கண்கண்ட சாட்சிகள் சிலருக்கு குருட்டுத்தனமான ஒரு நம்பிக்கையே போதுமானது. ஆனால் நம்மில் அநேகருக்கு ஆழமான பதில்களளை அளித்து உற்சாகப் படுத்தும் தூண்டுகோலாக புதிய ஏற்பாடு அமைந்துள்ளது. இப்படிப்பட்ட பதில்களை. நாம் அநேகரிடத்தில் பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம். வேதாகமம் உண்மையான வரலாற்று பூர்வமான ஆவனம் என்று





நிரூபிக்கதக்கதாக மலைப் போன்ற அநேக சாட்சிகள் இருப்பது மிகவும் சந்தோஷமான ஒன்று அகழ்வு ஆராய்ச்சிகள் மற்றும் கடைசி 150 வருடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட கையெழுத்துப்பிரதிகள் திரானாய்வளர்களின் கருத்துக்களை தோல்வி அடையச் செய்தன. இது ஒரு சுவாரிசியமான கதை எனவே நாம் சற்று பின்னாக திரும்பி வரலாற்று அடிப்படைகளைப் பார்ப்போம்.

# அடிப்படை செய்திகள்

வேதாகமத்தை பழித்துக் கூறிய அகழ்வாராயச்சியாளர்கள் மோசேயின் காலத்தில் (கி.மு 1400) எழுத்து முறை தோன்றவில்லை என்று கூறினர். ஆனால் உண்மையோ வேறுவிதமாகய் இருந்தது. எழுத்து முறை (Alphupetic utlity) எகிப்தில் மோசே பிறப்பதற்கு 400 ஆண்டுகளுக்கு முன்பாக கண்டுபிடிக்கப்பட்டது என்று கூறுகின்றனர். மேலும் சுமேரியர்கள் மோசே வாழ்ந்ததற்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பாகவே எழுதுவதை புழுக்கத்தில் வைத்திருந்தனர், என்று அவர்கள் கூறுகின்றனர். எகிப்தியர்கள் கி.மு 3000–க்கு முன்பாகவே எழுத்து வடிவமுறையே (Hicroglyphocs) மேப்படுத்தி வந்தனர் மோசே வாழ்ந்த காலத்தில் பாலஸ்தீனத்தில் இருந்த ஆளுனர்கள் எழுதிய கடிதங்களும் கிடைத்துள்ளன. இந்த கடிதங்கள் எகிப்தியர்களோடு தொடர்பு கொள்வதற்கு சாதனங்களாக இருந்தன. மோசே பார்வோனின் அரண்மனையில் வளர்ந்த போது கல்விமானாக வளர்ந்தான் என்பதற்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

பழங்காலத்தவர்கள் அநேகக் காரியங்களை குறித்து எழுதியுள்ளனர். அநேக கலாச்சாரங்களைக் குறித்து எழுதப்பட்ட கற்பலகைகள் இன்று அழியாமல் இருக்கின்றன எடுத்துக்காட்டாக, ஈரான் நாட்டிலுள்ள பிகிஸ்டன் (Behisten) எற்ற கல்வெட்டு முறையில் மூன்று கீயுனிபார்ம் மொழியில் எழுதப்பட்ட கல்வெட்டுகள் உள்ளன. இவை வேதாகப் பெயர்களாகிய (டாரியஸ், ஆகாஸ்வேரு) என்பவர் எஸ்தருடைய கணவன் நமக்கு தெரிந்த பழைய எற்பாட்டு நபர்களை குறிபிடுகின்றன) இதன் மூலம் அகழ்வாராச்சியாளர்கள் வேதாகம உண்மைகளை எப்படி உறுதிபடுத்த முடியும் என்பதற்கு இது ஒரு உற்சாகமான உதாரணமாக உள்ளது.

கற்களோடு கூட களிமண்ணையும் பழங்காலத்தில் பயன்படுத்தினர். அழிந்போன மிகப்பெரிய நூலகங்களிலிருந்து கிடைத்த களிமண்ணால் உறுவாக்கப்பட்ட பலகைகள் பேப்பராக (Paper) பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஏப்லா (Ebla) ராஜியத்தில் நூலகம் அநேக ஆண்டுகளுக்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்டது. சிரியா (Sriya) நாட்டில் தோண்டி எடுக்கப்பட்ட அரண்மனை நூலகத்திலிருந்து 20,000 (இருபாதாயிரம்) மூடப்பட்ட களிமண் பலகைகள் கிடைத்துள்ளன. இந்த எல்பா நூலகம் பழைய ஏற்பட்டிலுள்ள அநேக பட்டணங்களைக் குறித்து செய்திகளில் கூறுகின்றது. இது உர், யோப்பா மட்டும் காசா ஆகியவற்றை மட்டும் கூறாமல் சமவெளி பட்டணங்களாகிய

சோதோம் கொமாராவுடன் இருந்த வாணிபத் தொடர்புகள் பற்றியும் செய்திகளைச் கொடுக்கிறது.

மற்றும் பல பெரிய களிமண் நூலகங்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன அவைகள் பழைய ஏற்பாட்டில் நாம் படிக்கின்ற கலாச்சாரம் மற்றும் சமுதாய பழக்கவழக்கங்களை ஒளியூட்டிக் காட்டுவதாக அமைந்துள்ளன.

மரங்களிலும் பானைகளிலும் எழுதும் பழக்கமும் பழங்காலத்தில் இருந்தன. பானை ஒடுகள் குறிப்புகளை எடுப்பதற்கும் ரசீதுகளாகவும் பயன்படுத்தப்பட்டன. தாள் மிக நீண்டகாலம் வரை கண்டுபிடிக்கபடவில்லை. வசீனாவில் அநேக நூற்றாண்டுகளுக்க முன்பு கண்டுபிடிக்கப்பட்ட, தாள் செய்முறை மத்திய கிழக்கு நாடுகளில் கி.பி.1000 வரை அறிமுகமகாவில்லை.

பழைய ஏற்பாட்டின் புத்தகங்கள் தோல் சுருள்களில் எழுதப்பட்டுள்ளன, யூதர்கள் இந்த வேத வாக்கியங்கள் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட தோல் சுருள்களில் எழுதுவதை ஒரு ஒழுங்கு படுத்தப்பட்ட காரியமாகவும் சிறந்த பண்பாடாகவும் கருதினார். பதப்படுத்தப்பட்ட ஆடு, செம்மறி ஆட்டின் தோல் "பார்ச்மெண்டஸ்" (Parchments) என்று அழைக்கப்படும். வெல்லம் என்பது கன்றுக் குட்டியின் தோலிலிருந்து உருவாக்கப்பட்டது. இப்படிப்பட்ட தோல் சுருள்களாவான வேதாகம புத்தகங்களை பல ஆயிரம் ஆண்டுகள் பத்திரமாக பாதுகாத்து வைத்திருந்தனர்.

பேப்பிரஸ் (Papyrus) என்ற பேப்பர் போன்ற பொருள் கி.மு முன்பும் கி.பி பின்பு பல நூற்றாண்டுகளாக பயன்படுத்துப்பட்டது. பேப்பரஸ் என்பது தாள் அல்ல ஆனால் தாளைப் போன்றது இது நைல் நதியின் கரையோரங்களில் வளரும் நாணல் (Reed) தாவரத்திலிருந்து உருவாக்கப்பட்டது. இது பழங்காலத்தில் எகிப்தில் மிகப் பெரிய வியாபாரமாக இருந்து இந்தத் தாவரம் இன்றும் எகிப்து நாட்டில் வளர்ந்து வருகிறது இது 12முதல் 15 அடி உயரம் வரை வளரும் இதன் துண்டுகள் மனிதனுடைய கையை போல் தடிமன் உடையவைகளாக இருக்கும் கிரேக்கு மற்றும் ரோம் நாடுகளில் புத்தகங்களை உருவாக்கும் உலகளாவிய வழக்கத்தை ஏற்படுத்துவதற்கு பேப்பரஸ் மிகவும் பிரசித்தம் பெற்றதாக இருந்தது. சிறிய பதிவேடுகள் பக்கங்களாக உருவாயின பெரிய பதிவேடுகள் ஒவ்வொரு பக்கங்களாகப் இணைக்கப்பட்டு சுருள்களாக உருவாக்கப் பட்டன. ஒவ்வொரு பேப்பரஸ் சுருளும் 30 அடி நீளம் கொண்டதாக இருந்தன. புதியஏற்பாட்டு புத்தகங்களான லூக்காவும் அப்போஸ்தலர் நடப்படிகளும் இந்த காரணத்திற்காக இரண்டு பாகங்களாக பிரித்து எழுதப்பட்டுள்ளன. அவைகள் ஒன்றாக எழுதப்பட்டால் சுருள் தொகுப்பு மிகவும் நீண்டதாக காணப்படும்.

இயேசுகிறிஸ்துவின் நாட்களில் சுருள் வடிவம் நீங்கி கோடக்ஸ் (codex) என்ற புத்தக முறை வந்தன இந்த கோடக்ஸ் முறையில் புத்தகம் என்பது பேப்பர் என்ற தாள்களை துண்டுளாக அடுக்கி இறுதியில் கட்டிவைக்கும் முறையாகும் (Binding) இந்த கோடஸ் முறை மிகவும் எளிதாகவும் அநேக காரியங்கள் எழுதுவதற்கும் பயனுள்ளதாக இருந்தது, கிறிஸ்தவர்கள் இந்த முறையை உபயோகித்தனர், ஆனால் யூதர்கள் இயேசு கிறிஸ்து வாழ்ந்து அநேக நூற்றாண்டுகளுக்கு பின்பும்





சுருள் முறையையே பயன்படுத்தினார்.

பேப்பரஸின் பதிவேடுகள் மென்மையானவைகளும் அடைக்கப்பட்ட கல்லறைகள் காற்றுபுகாத ஜாடிகள் ஆகியவைகளில் வைத்துப் பாதுகாக்கப்படும் போது நீண்ட நாட்கள் இருப்பவைகளாகவும் உள்ளன. எகிப்து மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் இந்த பழக்கம் மிகவும் பொருந்தமாக இருந்தது. இன்றைக்கு இருக்கக்கூடிய பேப்பரஸ் ஆவணங்களில் அதிகபட்சமானவை எகிப்து நாட்டிலிருந்து கைப்பற்றபட்டவை.

புதிய ஏற்பாட்டு புத்தகங்கள் யாவும் பேப்பரஸ் முறையில் எழுதப்பட்டடிருக்கலாம் ஆதிகால கிறிஸ்தவர்கள் இவைகளை அதிக கவனத்தோடு கையாண்ட போதும் அடிக்கடி பயன்படுத்தியதன் காரணமாக அவைகள் அழிந்து போயின. எனவே மூலப் பிரதிகள் முற்றிலுமாக அழிந்துவிட்டன. 300 ஆண்டுகளுக்கு பிறகு புதிய ஏற்பாடு வெல்ல கோடக்ஸ் என்ற புத்தக் வடிவில் கிடைத்தது . இது இன்னும் அதிக காலம் நீடிக்ககூடியது. ஆதித் திருச் சபைகள் அப்போஸ்தலருடைய நிருபங்களை வெல்லம் முறையில் நகலகள் எடுத்தனர். நமக்கு கிடைத்த மிக முக்கியமான இரண்டு புதிய ஏற்பாட்டு புதிவேடுகள் கி.பி 325 வெல்லம் முறையில் மிகவும் விலையுயர்ந்த தரத்தில் எழுதப்பட்டவை.

பேப்பிரஸ் தாள் மற்றும் பேப்பர் பதிவேடுகள் இன்றைக்கும் உள்ளன. இவைகளில் வேதாகம புத்தகங்கள் மிகத் துல்லியமான உண்மைகள் என்பதற்கு வல்லமையான சாட்சிகள் உள்ளன.

வேதாகமம் மூன்று மொழிகளில் எழுதப்பட்டுள்ளது. அவை எபிரேயம் அராமிக் மற்றும் கிரேக்க மொழியாகும். பழைய ஏற்யாடு முழுவதும் எபிரேய மொழியில் எழுதப்பட்டுள்ளது இந்த மொழி இன்றும் இஸ்ரேல்நாட்டில் பேசப்படுகிறது.

அதே போன்ற மற்றொரு மொழி அராமிக், அராமிக் மொழி கி.மு 500 பாலஸ்தீன நாட்டில் வாழ்ந்த சாதாரண மக்களால் பேசப்பட்டது. இது இஸ்ரவேல் தேவம் அடிமைத்தனத்திலிருந்து மீண்டதற்குப் பின்பு பேசப்பட்டமொழியாகும் தானியேல் புத்தகத்தின் ஆறு அதிகாரங்களும் அதோடு சேர்ந்து எஸ்ரா புத்தகத்தின் 4 அதிகாரங்களும் அராமிக் மொழியில் கிடைத்துள்ளன, மேலும் புதிய ஏற்பாட்டில் உள்ள அஃப்பா ( Abba) மாரநாத, ஏலி லாமா சபக்தானி ஆகிய சொற்களும் அராமிக் மொழியைச் சார்ந்தது. இன்னும் இந்த மொழி தமஸ்க்கு மற்றும் சிரியா நாடுகளிலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் பேசப் படுகிறது.

உண்மையாகவே புதியஏற்பாடு முழுவதும் கிரேக்க மொழியில் எழுதப்பட்டுள்ளது. அந்த நாட்களில் மகா அலெக்ஸாண்டரால் இந்த மொழி உலகளாவிய மொழியாக மாற்றப்பட்டிருந்தது. அதற்காக அலெக்ஸாண்டருக்கு நன்றி சொல்லுகின்றோம். முதலாம் நூற்றண்டில் வாழ்ந்த சாதாரண மனிதனின் கிரேக்க மொழி கொயினி (Koine) என்று அழைக்கப்பட்டது. இது தனக்கென்று ஒரு நடையும் சிறப்பு அம்சங்களையும் உடையதாக இருந்தது. கிரேக்க மொழி இன்றைக்கும்

இலட்சக்கணக்கான மக்களால் பேசப்படுகிறது. எழுத்துக்களோ மாறாமலேயே உள்ளன. ஆயினும் கிரேக்க மொழிச் சொற்கள் சற்றே மாற்றமடைந்துள்ளன. அநேக வார்த்தைகள் மாற்றமடையவில்லை ஆங்கிலம் 500 ஆண்டுகளில் அடைந்த மாற்றங்களைவிட கிரேக்க மொழி 2000 ஆண்டுகளில் மிகக் குறைந்த மாற்றத்தை அடைந்துள்ளது, எனக்கு நன்கு ஞாபகமயிருக்கின்றது. நான் பல்கலைகழகத்தில் படிக்கும் போது பேராசிரியர் சில நேரங்களில் மாணவர்கள் எழுந்து கிரேக்க மொழியை சத்தமாக படிக்க சொல்லுவார். அப்போஸ்தலர்கள் வாழ்ந்த காலத்திலிருந்த உச்சரிப்பு இந்த நாட்களில் மிகவும் மாற்றமடையிருந்தாலும், இந்த நாட்களிலும் கேட்பதற்கு இவைகள் மிகவும் இனிமையானதாக இருக்கின்றன.





# அத்தியாயம்- 3

## நம்முடைய புதிய ஏற்பாடு எவ்வளவு துல்லியமானது?

எந்த ஒரு புத்தகத்தையும் துல்லியமானது என்று கணிப்பதற்கு இரண்டு முக்கிய கேள்விகள் கேட்கப்பட வேண்டியது அவசியமாகிறது சம்பங்கள் நிகழ்ந்த காலத்துக்கும் அவைகள் எழுதப்பட்ட காலத்துக்கும் இடைபட்ட கால அளவு என்ன? என்பது முதலாவது கேட்கப்பட வேண்டிய கேள்வியாகிறது. அந்த இடைப்பட்ட கால அளவு 100 ஆண்டுகளுக்கு மேற்பட்டதாக இருக்குமானால் அந்த புத்தகம் மாற்றமடைந்ததாகவும் தவறான செய்திகளை கொடுப்பதாகவும் கணிக்கப்படும். உதாரணமாக புத்தமதக் கொள்கைகள் புத்தர் வாழ்ந்த காலத்திற்கு பின் 500 ஆண்டுகள் கழித்து எழுதப்பட்டுள்ளன. இந்துக்களின் வேதங்களும் 700 ஆண்டுகள் காலதாமதம் செய்து எழுதப்பட்டுள்ளன. பல நூற்றாண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு நிகழ்ச்சியை ஒரு ஆசிரியர் எவ்வாறு துல்லியமாக எழுத முடியும்? என்று அனேகர் கேள்வி எழுப்புகின்றனர்.

புதிய ஏற்பாடு கண்கண்ட சாட்சிகளின் சாட்சியோடு எழுதப்பட்டதாகும். இது முதலாம் நூற்றாண்டு வரலாற்றில் தனக்குரிய இடத்தை பிடித்துள்ளது.

சம்பங்கள் எழுதப்பட்ட காலத்திற்கும், பிரதிகள் (நகல்கள்) எடுக்கப்பட்ட காலத்திற்கும் இடைப்பட்ட கால அளவு என்ன? என்பது இரண்டாவது கேள்வியாகும். எழுதப்பட்ட காலத்திலிருந்து பிரதிகள் எடுக்கப்பட்ட காலம் 1000 வருடங்கள் தள்ளி எடுக்கப்பட்டிருக்குமானால் அது தவறான புத்தகம் என்று கணிக்கப்படும்.

அதிர்ஷ்டவசமாக புதிய ஏற்பாடு இப்படிப்பட்ட சோதனைகளை தாண்டி வெற்றி நடை போடுகின்றது. பழங்காலத்தில் எழுதப்பட்ட எந்த ஒரு புத்தகத்தையும் விட இது மேன்மையானது.

### சம்பவங்கள் நடக்கும்போது எழுதப்பட்டதா? அல்லது நடந்த முடிந்தவுடன் எழுதப்பட்டதா?

புதிய ஏற்பாட்டு நிகழ்ச்சிகளில் அதிகமானவைகள் கி.பி 27–க்கும் 62–க்கும் இடைப்பட்டகாலத்தில் எழுதப்பட்டவை. இயேசுவின் ஊழியம் 27–ம் நூற்றாண்டில் தொடங்கின்றது.

மேலும் அப்போஸ்தலர்கள் நட படிகள் 67-ல் பவுலின் (ஊழியத்தோடு) சிறைச்சாலை ஊழியத்தோடு நிறைவடைகின்றது. 62-ம் ஆண்டுக்கு பின் அவைகள் எத்தனை ஆண்டுகளுக்கு பின் எழுதப்பட்டன? சில மேதைகள் கணித்தது போல அவை 100 ஆண்டுகள் கழித்து எழுதப்பட்டவையா? அல்லது 200 ஆண்டுகள் கழித்தா? எப்பொழுது எழுதப்பட்டது. ஆச்சரியப்படும் வகையில் அப்படியல்ல. முதலாவதாக எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டு புத்தகம் கலாத்தியர் புத்தகமாகும். இது அப்போஸ்தலர் பவுலினால் கி.பி 45-ல் எழுதப்பட்டது. இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவை நடந்து 15 ஆண்டுகளுக்கு பிறகு திருச்சபையானது போதனைகளையும் உபதேசங்களையும் எழுதி பதிவுசெய்யத்தொடங்கியது. பவுல் கலாத்தியர் புத்தகத்தை எழுதும் போது சம்பவங்கள் எல்லாம் நடைமுறையில் இருந்து வந்தன. வாய் வழியாக பரவிய எந்தவொரு பண்பாட்டையோ மரபுவழிச் செய்தியையோ பவுல் எழுதி வைக்கவில்லை. மாறாக கண்ணாரக் கண்ட காட்சிகளையே அவர் எழுதியுள்ளர். புதிய ஏற்பாட்டில் அநேக நிகழ்ச்சிகள் நடைபெற்ற காலத்திலேயே எழுதப்பட்டவை.

மற்ற புத்தகங்கள் எல்லாம் கலாத்தியரை தொடர்ந்து துரிதமாக எழுதப்பட்டன. புதிய ஏற்பாட்டு நிகழ்ச்சிகள் எல்லாம் கி.பி. 62ல் முடிவடைந்தன எல்லா புத்தகங்களும் கி.பி. 69-ல் எழுதி முடிக்கப்பட்டன. எனவே இடைப்பட்ட கால அளவு 7 வருடங்களே ஆகும். இது ஒரு மிகச்சிறிய கால இடைவெளியாகும். இந்த இடைவெளியானது வரலாற்று ஆசிரியர்களால் கண்டு கொள்ளப்படாமல் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறிய இடைவெளியாகும். எழுத்தாளர்கள் அனைவரும் பெரிய தகுதியுள்ள இடங்களில் இருந்து கொண்டு தங்கள் எழுத்துகள் அனைத்தும் உண்மையானவை என்று நிரூபிக்க கூடியவர்களாக இருந்தார்கள். அவர்கள் தங்கள் மூதாதையர்களிடமிருந்து பெறப்பட்ட வாய்வழியான புராதனக் கதைகளை எழுதவில்லை அவர்கள் கேட்டதையும், கண்டதையும் எழுதிவைத்த கண்கண்ட சாட்சிகளாவர். 1976-ல்'புதிய ஏற்பாட்டுக்கு மறு தேதியிடுதல்' என்ற புத்தகத்தில் டாக்டர். ஜான்.ஏ.டி ராபின்சன் என்பவர் புதிய ஏற்பாட்டு புத்தகங்கள் அனைத்தும் கி.பி. 70க்கு முன்பு எழுதப்பட்டவை என்று குறிப்பிட்டுள்ளார்.

இருபதாம் நூற்றாண்டின் முதற் பாதியில் வாழ்ந்த வேதாகம ஆராய்ச்சியாளர் வில்லியம் எஃப் ஆல்பிரைட் கூறும்போது, இன்றைக்கு உள்ள சில கடுமையான திறனாய்வாளர்கள் சொல்வதைப் போல புதிய ஏற்பாடு கி.பி 130-க்கும் கி.பி 150-க்கும் இடையே எழுதப்பட்டிருப்பதற்கான ஆதாரங்கள் ஏதும் இல்லை. மேலும் கி.பி 80 க்குப் பிறகு இவைகள் எழுதப்பட்டிருப்பதற்கான எந்த வித உறுதியான ஆதரங்கள் ஏதும் இல்லை என மேலும் "இன்றைய கிறிஸ்துவம்" என்ற நாளேட்டில் எழுதும் போது புதிய ஏற்பாட்டு புத்தகங்கள் ஒவ்வொன்றும் என்னுடைய கருத்தின்படி ஞானஸ்நானம் பெற்ற யூதர்களால் 40-க்கும் 80-க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டவை எனவே அவை முதல் நூற்றாண்டை சார்ந்தவை (ஏறத்தாழ கி.பி. 50க்கும் 75க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டவை) என்று கூறுகின்றார்.

காலச்சுழற்சிகள் ஏற்பட்டாலும் இந்த விஷயத்தில் எந்தவிதமான சந்தேகமுமில்லை





சம்பங்கள் நடைபெற்ற காலமும் அவைகள் எழுதப்பட்ட காலமும் மிகவும் குருகிய காலமேயாகும் அப்போஸ்தளர்களின் நடைபடிகளில் காலத்தில் தான் புதிய ஏற்பாட்டின் முதல் புத்தகம் இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்கு 15 ஆண்டுகளுக்கு பிறகு எழுதப்பட்டது. அப்போஸ்தலர் நடப்படிகள் புத்தகம் அதில் எழுதப்பட்டுள்ள கடைசி சம்பவம் முடிந்த 7ஆண்டுகளுக்கு பிறகு எழுதப்பட்டது.(பவுலின் சித்திரவதை) உண்மையாக முழு புதிய ஏற்பாடும் எருசலேம் பட்டணமானது. கி.பி. 70-ல் ரோமர்களால் முற்றுகையிடப்பட்டதற்கு முன்பே எழுதிமுடிக்கப்பட்டது.

இந்த உண்மைகளின் முக்கியத்துவம் என்ன? வேதாகமம் என்று இயேசுகிறிஸ்துவின் மரணத்திற்கு பின்பு, அநேகம் நூற்றாண்டுகள் கழித்து எழுதப்பட்ட கதைகளின் தொகுப்பு என்ற விவாதம் பொய்யாக்கப்பட்டுள்ளது. புதிய ஏற்பாடு என்பது முதல் நூற்றாண்டில் எழுதப்பட்ட புத்தகமாகும் (பதிவேடாகும்).

இரண்டாவதாக இந்த புத்தகம் துல்லியமானது என்பது இப்பொழுது மிகவும் தெளிவாகிறது. ஆராய்ச்சியாளர்கள் யாவரும் சம்பவம் நடந்த காலத்திற்கும், எழுதப்பட்ட காலத்திற்கும் இடைப்பட்ட காலம் மிகவும் குறுகியது. ஆதலால் எப்படிப்பட்ட கட்டுக்கதைகளும், புராணங்களும் கலப்பதற்கு ஏதுவில்லை என்று ஒப்புக்கொள்கின்றனர். அப்போஸ்தலர்கள் கடுமையாக பொய்யாக எழுதியிருக்கிறார்கள் என்பதற்கு எந்தவிதமான சாத்தியமுமில்லை. அவைகள் எழுதப்பட்ட காலத்தில் வேதாகம பாத்திரங்களும் சாட்சிகளும் உயிரோடு இருந்தனர். இவர்கள் அனைவரும் உயிரோடு இருந்த பகுதிகளில் புதிய ஏற்பாடு உலா வந்தது அநேக சபைகள் புதிய ஏற்பாட்டு புத்தகங்கள் விலை மதிக்கத்தக்கவை என்று ஏற்றுக்கொண்டனர். நூற்றுக்கு மேற்பட்ட சாட்சிகள் உயிரோடு இருக்கும் போது பொல்லாத கதைகள் இந்த புத்தகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது என்பது நம்பமுடியாத விஷயமாகும். அதற்கு எந்தவிதமான வழியும் இல்லை.

நெல்சன் மண்டேலா 1990-ல் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார் என்று நான் கூறினால் நீங்கள் நம்புவதைப் போன்றதுதான் இந்தக்கருத்து. அவர் கல்லறையில் இருந்து உயிரோடு எழுந்தார் என்று கூறினார் நீங்கள் நகைப்பீர்கள். காரணம் நாம்எல்லோரும் அந்த சம்பவத்தோடு தொடர்பு உடையவர்களாக இருக்கிறோம். நம்முடைய ஞாபகசக்தி தெளிவாக இருக்கிறது. அவருடைய கதையை நாம் நன்கு அறிந்திருக்கிற படியினால் பொய்களை நம்ப வேண்டியதில்லை நூற்றுக்கணக்கானவர்களுக்கு இது கண்கண்ட காட்சியாகும். இதைப் போன்றுதான் அப்போஸ்தலர்களின் வாழ்க்கையும். அப்போஸ்தலர்கள் முதல் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள் என்பது தெளிவாக உள்ளதால் இந்த நிகழ்ச்சிகளும் துல்லியமானவை என்பது உறுதியாகின்றது.

## மூலச்சான்றுகளை பற்றி என்ன?

நீங்கள் ஏன் உங்கள் ஆதாரச்சான்றுகளை (Orginal) வைத்திருக்கவில்லை என்று இந்த இடத்தில் கேள்வி எழுப்பலாம். இதற்கு பதிலளிக்க வேண்டுமென்றால் பேப்பிரஸ் புத்தங்களும் நாம்

இன்றைக்கு பயன்படுத்தும் பேப்பர் புத்தகங்களை போல நாற்பட்ட புழுக்கத்தினால் அழிந்து போய் விட்டன. சபைகள் அவைகளை அநேக ஆண்டுகளாக பாதுகாப்பாக வைத்திருந்து நகல்கள் எடுத்து எல்லா இடங்களுக்கும் அனுப்பி வைத்தனர் முதலாம் நூற்றாண்டு சபையில் இந்த ஆவணங்கள் அனைத்தும் 100 ஆண்டுகள் வரை இருந்தன என்று சில மேதைகள் கூறுகின்றனர். A.D.196-ல் டெர்குல்லியன் (Ter Kullian) எழுதிய கூற்று எனக்கு மிகவும் பிடிக்கும். மேதைகள் யாவரும் அப்போஸ்தலர்கள் எழுதிய கடிதங்கள் (Original) அனைத்தும் இன்னும் இருக்கின்றன. என்று கூறுகின்றார்.

"உங்கள் இரட்சிப்புக்காக நீங்கள் ஆர்வத்தோடு பயன்பெறப்படும். அப்போஸ்தலர் சபைகளில் இன்னும் இருக்கின்றனர் அப்போஸ்தலர்களுடைய நாற்காலிகளை சென்று பாருங்கள் அங்கே அவர்களுடைய நிருபங்கள்எல்லாம் வாசிக்கப்படும் அங்கே ஒவ்வொருடைய சாயலையும் காணமுடியும் ஒவ்வொரு வருடைய குரலையும் கேட்கமுடியும் அகாயா பட்டணம் உங்களுக்கு அருகில் உள்ளதா ? கொரிந்து பட்டணம் உங்களுக்கு அருகில் உள்ளதா ? நீங்கள் மக்கதொனியாலிருந்து மிக தூரத்தில் இல்லையா ? பிலிப்பி மற்றும் தெசலோனிக்கேயா பட்டணங்கள் அருகில் உள்ளனவா ? உங்களால் ஆசியாவுக்கு போக முடியுமா ? எபேசு உங்கள் பக்கமா ? இத்தாலி உங்களுக்கு சம்பமா ? ரோம்நகரம் அருகில் உள்ளதா?"

அதிகமான நகல்களை எடுப்பதற்கு சபைக்கு நிறைய நேரம் இருந்தது என்பது நன்கு புலனாகின்றது இப்படிப்பட்ட அநேக நகல்கள் இன்னும் இருக்கின்றன. நமக்கு புதிய ஏற்பாட்டின் ஆரம்ப புத்தகம் (Originals) இல்லாவிட்டாலும் (பிளாட்டோ, ஹோமர் போன்றவர்களின் படைப்புகளும் கூட இல்லை) இந்த கடிதங்கள் எல்லாம் எழுதப்பட்டு, பெற்றுக்கொள்ளப்பட்டு, நகல்கள் எடுக்கப்பட்டு எல்லா இடங்களுக்கும் அனுப்பப்பட்டன என்று உறுதியாக கூறமுடியும் (கொரிந்தியர் 4:16) மேலும் பொதுஇடங்களிலும் வாசிக்கப்பட்டன. (1 தெசலோனிக்கேயர் 5:27 ஆதி திருச்சபையில் சேகரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டன. நகல்கள் எடுக்கப்பட்ட காலங்கள் அனைத்தும் கி.பி. 110-க்குல் முடிந்து விட்டன (பேப்பிரஸ் என்பது கி.பி. 52ல் இருந்தது என்று மான்செஸ்டரில் இங்கிலாந்தில் தேதியிடப்பட்டது.) ஒரு சிலர் இதை இன்னும் பழமையானவை என்று கூறுகின்றனர். ஆனால் 110கி.பி. என்பதுதான் சரியான கணிப்பு பேப்பிரஸியில் எழுதப்பட்ட யோவான் புத்தகத்தின் நகலை நாம் வாசிக்க முடியும் என்பது ஒரு ஆச்சரியப்பட வேண்டிய விஷயம் இது ஒரு முதல் நூற்றாண்டு நகலாகத் தான் இருக்கமுடியும். கி.பி.52 ல் தேதியிடப்பட்ட பேப்பிரஸ் பிரதியை நம்முடைய வேதாகமத்தோடு ஒப்பிட முடியும் இதுவே மிகச் சரியானது கடைசி நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட பேப்ரஸின் புத்தகங்கள் புதிய ஏற்பாடு மிகவும் உண்மையானது என்ற கருத்தை துல்லியமாக ஒப்புக்கொள்ள உதவுகின்றது.

மூலச்சான்றுகள் இல்லை என்பவை நம்முடைய விசுவாசத்தை அசைக்க முடியுமா ? இல்லவே இல்லை. மூலப்படிவங்கள் எழுதப்பட்டதற்கும், நகல்கள் எடுக்கப்பட்டதற்கும் இடைப்பட்ட காலங்கள்





மிகவும் குறுகியவை. மேலும் நம்முடைய பிரதிகள் எல்லாம் மிகவும் சிறந்தவைகளும், அதிகமான எண்ணிக்கையிலுமுள்ளன. மூலப்படிவங்கள் கிடைத்தாலும் கூட அவைகளை கண்டுகொள்ளமுடியாத அளவுக்கு நகல்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளன.

## உதவிக்கு அகழ்வாராய்ச்சி.....

புதிய ஏற்பாட்டு பதிவேடுகளைக் குறித்து கடந்த சில நூற்றாண்டுகளில் என்ன நடந்தது என்பது மிகவும் ஆச்சிரியப்பட வேண்டிய ஒன்று. சில நூற்றாண்டுகளுக்கு முன்பு பல மேதைகளும், வல்லுனர்களும் உலகம் முழவதிலுமுள்ள ராஜ்யங்களை பார்வையிட சுற்றுப்பயணம் மேற்கொண்டனர். அவர்கள் நூலகங்களையும், சபைகளையும் துறவிகளின் வசிப்பிடங்களையும் பார்வையிட்டனர். புதிய ஏற்பாட்டின் பண்டைய கைப்பிரதிகளை தொகுத்து முறைப்படுத்தி அவற்றை புகைப்படங்கள் எடுத்து பாதுகாப்பதற்கு சீரிய முயற்சி களை எடுத்துள்ளனர். மேலும் கிடைத்த புதிய ஏற்பாட்டு பதிவேடுகளையும் பாதுகாக்க முயன்றனர் வேதாகம வசனங்கள் குழப்பப்பட்ட சமைக்கப்பட்ட மாமிசம் என்று நிரூபிப்பதற்கு பதிலாக, இந்த காரியம் புதிய ஏற்பாட்டு புத்தகம் எந்தவித சந்தேகத்திற்கும் இடமின்றி ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒருமைப்பட்ட வேதவசனம் என்று உலகம் முழுவதிலுமுள்ள விசுவாசிகளை உற்சாகப்படுத்துவதாக அமைந்தது. நீங்கள் நம்பினாலும் நம்பாவிட்டாலும் சரி. இன்றைக்கு உலகம் முழுவதிலுமுள்ள நூலகங்களிலும், மடங்களிலும் அருங்காட்சியங்களிளும் சபைகளிளும் 40,000-க்கும் மேற்பட்ட புதிய ஏற்பாட்டு நகல்கள் இருக்கின்றன. கி.பி 300-லிருந்து நூற்றுக்கணக்கான 'வெல்லம்' (Vellum) மற்றும் 'பார்ச்மென்ட்" (archment) பதிவேடுகள் உள்ளன. மேலும் பேப்பிரஸ் புத்தகங்களும் அதன் கிழிந்து போன பாகங்களும் மலைபோல கிடக்கின்றன. இவைகள் தோல் சுருள் காலத்துக்கும் மூலப்படிவங்களுக்கும் இடைப்பட்ட காலத்தை நிரப்புகின்றனவாக அமைகின்றன.

இன்றைக்கு "பேப்பரஸ்" புத்தகங்கள் எல்லாம் எகிப்தில் இருந்துதான் கிடைக்கின்றன வறண்ட வனாந்திர காலநிலையில்தான் பேப்பரை போன்ற பொருள்கள் நிண்டகாலம் தாக்குப்பிடிக்கும் பிளிண்டர்ஸ்பெட்ரி (Flinders petrie) என்பவர் மத்திய எகிப்தில் அகழ்வாரய்ச்சி செய்யும் போது பூமிக்கடியில் புதைக்கப்பட்டிருந்து குப்பை கூளத்தைப் போலிருந்த பேப்பிரஸ் தாள்களை தோண்டி எடுத்தார். ஆரம்பத்தில் 1895-ல் ஆக்யிரின்கஸ் (oxyrhynchus) என்ற இடத்தை சுற்றி ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு ஆராய்ச்சியை தொடங்கினாார். அவர்கள் ஆயிரக்கணாக்கான பதிவேடுகளையும் அவைகளின் அவைகள் கிழிக்கப்பட்ட பாகங்களையும் கண்டறிந்தனர். அவர்கள் அவைகளை மூடப்பட்டிருந்த குப்பை கூளங்களின் நடுவில் இருந்து பிடித்து இழுத்து எடுத்தனர். "மம்மிஸ்" என்று அமைக்கப்பட்ட செத்துப் போன உடல்களின் பெட்டிகளில் அவைகள் அடைக்கப்பட்டிருந்தன பதப்படுத்தப்பட்ட முதலைகளின் உடலிலும் அவைகள் அடைக்கப்பட்டிருந்தன. அவைகள் கடிதங்கள், ரசீதுகள், பில்கள், டையிரிகள், ( நாட்குறிப்பேடு ) சான்றிதழ்கள் மற்றும் நாட்காட்டிகளாகவும் இருந்தன. சில BC 2000-க்கு முற்பட்டவைகளாக இருந்தன அநேகப் பிரதிகள்

இயேசு கிறிஸ்துவின் பிறப்பிற்கு சற்று முந்தினதாகவும், பிந்தினதாகவும் இருந்தன. அவைகளில் ஆதிகிறிஸ்தவர்கள் எழுத்துக்களும் இருந்தன. விலை மதிப்பற்ற வேதாகம வசனங்கள் ஆதிகால சீஷர்களால் எழுதி பிற்காலத்திற்காக வைக்கப்பட்டிருந்தன இந்த 'பேப்பரி' பதிவேடுகள் வேதாகம புத்தகங்கள் எந்த அளவுக்கு நூற்றாண்டுகளை கடந்து வந்துள்ளன என்பதை காண்பிக்கின்றன. இன்றைக்கு நாம் வாசிக்கும் புதிய ஏற்பாடு முதலாம் நூற்றாண்டில் எழுதப்பட்டவைகளின் துல்லியமான படைப்பாகும்.

பேப்பரி பதிவேடுகள் நமக்கு எப்படி பார்ச்மெண்ட் பதிவேடுகள் கிடைத்தன என்பதை மட்டும் உணர்த்தாமல் அந்த காலத்தில் இருந்த கிரேக்க மொழியையும் பிரதிபலிக்கின்றது. பழங்கால கிரேக்க மொழியில் இல்லதாத 500 கிரேக்க வார்த்தைகள் புதிய ஏற்பாட்டில் உள்ளன. வேதாகமம் தனக்கென்று விசேஷமான அருஞ்சொற்களை உடையதாக திகழ்கிறது. இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகளுக்கு பின்பும் கூட அறிமுகப்படுத்தபடாத அரிய சொற்கள் புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளன. எனவே இந்த 'பேப்பரி' பதிவேடுகள் மணலிருந்து பிடுங்கி எடுக்கப்பட்ட பின்பு அவைகள் எடுக்கப்பட்ட காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட நடையையும், தரத்தையும் உடையனவாக இருந்தது.

வேதாகமமானது புதிய ஏற்பாட்டு நிகழ்ச்சிகள் நடந்தபிறகு 100 அல்லது 200 ஆண்டுகள் கழிந்து எழுதப்பட்டவை என்ற இன்றைய திறனாய்வாளர்களின் நவீன கொள்கை மிகவும் மட்டமான குப்பை. புதிய ஏற்பாட்டு புத்தகங்கள் முதலாம் நூற்றாண்டில் நடந்த நிகழ்ச்சிகளின் தொகுப்புகள் என்ற கருத்தை யாரும் மறுத்து விவாதிக்கமுடியாது.

நமக்கு கிடைத்துள்ள நகல்கள் அனைத்தும் மிக துல்லியமானவை எனவே நிகழ்ச்சிகள் சம்பவித்த காலத்துக்கும் எழுதப்பட்ட காலத்தக்கும் இடைப்பட்ட காலம் மிகவும் குறுகியது என்பது தவிர்க்கமுடியாததாகிறது.

புதிய ஏற்பாட்டு புத்தகங்கள் அனைத்தும் துல்லியமானவை என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. புதிய ஏற்பாட்டை எழுதிய நபர்களின் அதே வார்த்தையயை ஒருவர் வேதாகமத்தில் படிக்கலாம் என்பது சந்தேகத்திற்குரியதல்ல. நீங்கள் கண்டிப்பாக எப்பொழுதும் போல இதை விசுவாசித்தே ஆக வேண்டும். மூலப்படிவங்களிலிருந்து பெறப்பட்ட உண்மையான துல்லியமானதே வேதாகமம் என்று இப்போது பொதுவாக கணிக்கப்படுகிறது.

மகா வல்லமையுள்ள சாட்சி அல்லது அத்தாட்சி (நிருபணம்) பழங்கால இலக்கியத்தை குறித்து இரண்டு தரங்கள் இருந்தன என்பதை கிறிஸ்தவர்கள் நன்கு உணர வேண்டும். புதிய ஏற்பாடானது இப்படிப்பட்ட தரம் வாய்ந்த நுண்ணோக்கியால் நோக்கப்பட்டு மணம் நிறைந்த ரோஜாவாக வெளிவந்து. இந்த விஷயங்கள் மற்ற பழங்கால புத்தகங்கள் எல்லாம் அவ்வளவு தரம் வாய்ந்தவைகளாக இல்லை. பழங்காலத்தில் (Middleage) இருந்த மிகச்சிறந்த புத்தகங்களோடு





வேதாகமத்தை ஒப்பிட்டு பார்ப்போம்.

பிளாட்டோ 400 BC-ல் எழுதுகிறார் நம்முடைய முதல் நகல் A.D. 900-ல் தேதியிடப்பட்டுள்ளது. இவைகளுக்கு இடைப்பட்ட காலம் 1300 வருடங்கள் இன்னும் அதிகமாக கூற வேண்டுமானால் பிளாட்டோவின் பதிவேடுகள் 7 பதிவேடுகள் மட்டுமே உள்ளன. அரிஸ்டாடில் இதைப்போன்ற அத்தாட்சியோடு நிற்கிறார். அவருடைய மூலப் படிவங்களுக்கும் நம்முடைய முதல் நகலுக்கும் இடைப்பட்ட காலம் 1500 ஆனால் 5 நகல்கள் மட்டுமே இருக்கின்றன. மூலப்படிவங்கள் எழுதப்பட்ட 2,200 ஆண்டுகளுக்கு பிறகுதான் ஹோமர் (Homer) எழுதிய ஒடிசி புத்தகத்தின் நகல்கள் எடுக்கப்பட்டன ஆம் 2,200 ஆண்டுகள், ஆனால் ஒருவரும் இந்த புத்தகங்களின் ஆரம்பத்தை குறித்து எந்தவிதமான சந்தேகத்திற்குரிய கேள்விகளையும் எழுப்பவில்லை. மேதைகள் யாவரும் அவையாவும் பழைய புத்தகங்களிருந்து கருத்தாக வழிவகையாக எழுதப்பட்டுள்ளன என்று உலகலாவிய கருத்துகளை உடையவர்களாக இருக்கின்றனர். வேதாகமம் மிகவும் சரியாக பலரால் சரிபார்க்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது ஆனால் இது முரண்பட்டதாக கூறுகின்றனர். மற்ற அனேக புத்தகங்களும் மூலப்படிவத்திற்கும் நகல்களுக்கும் இடைபட்ட காலங்கள் 1000-க்கும் மேற்பட்டவைகளாக இருக்கின்றன.

## இந்த அட்டவனையை கவனியுங்கள்

| வேலை | எழுதப்பட்டகாலம் | முதலாவதுநகல் | காலம் | மொத்தநகல்கள் |
|---|---|---|---|---|
| தியுசிடிசின் வரலாறு | 450BC | 900AD | 130ஆன்டுகள் | 8 |
| அரிஸ்டாடிலின் கவிதைகள் | 343BC | 1100AD | 1450ஆன்டுகள் | 5 |
| சிசரும் காலிக்சண்டைகளும் | 50BC | 1000AD | 1050ஆன்டுகள் | 9 |
| பிணாட்டொ | 400BC | 900AD | 1300ஆன்டுகள் | 7 |
| ஹோமரின் இல்ளயாடு | 900BC | 400AD | 500ஆன்டுகள் | 643 |
| புதிய ஏற்பாடு | 4580AD | 110AD | 30ஆன்டுகள் | 24,600 |

ஒருவர் எவ்வளவு பதிவேடுகள் இருக்கின்றன என்பதை அறிய வேண்டும் புதிய ஏற்பாடுக்ள மற்றவைகளை தோற்கடிக்க செய்கின்றன. இன்னும் அதிகமாகவும் உள்ளன. பழைய உலகத்தில் ஒரு ஆவணத்தின் மொழி பெயர்ப்பு என்பது மிகவும்அசாதாரணமானது நமக்கு இலத்தீன் மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட 20,000 புதிய ஏற்பாட்டு நகல்கள் இருக்கின்றன. பழங்கால ஆவணங்கள் கையளவுள்ள பதிவேடுகளை வைத்துக் கொண்டு மேன்மைபாராட்டும் போது வேதாகமம் ஆச்சரியப் படக்கூடிய அளவு பதிவேடுகளால் நிறைந்ததாக காணப்படுகின்றது.

புதிய ஏற்பாடு இலத்தீன், காப்டிகள், சிரியா, மற்றும் பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்து. எனவே இது 40,000 பதிவேடுகளை கொண்டதாக உள்ளது. இந்த வித்தியாசம்

மற்ற பண்டைய நூல்களுடைய பிரதிகளின் எண்ணிக்கையை ஒப்பிடும் போது அவைகள் உண்மையாகவே சங்கோஜப்படக் கூடிய அளவுக்குள்ளது. ஓர் சிறிய உண்மை 10 பழைய நூல்களை ஒன்றாக் சேர்த்து அங்கீகாரம் செய்வதை விட வேதாகமம் சிறப்பாக அங்கீகாரம் செய்யப்பட்டுள்ளது.

இதை கவனியுங்கள், யாராவது ஒருவர் வேதாகமத்தை தள்ளிவிடவேண்டும் என்று நினைத்தால் இன்று நமக்கு கிடைத்திருக்கும் எல்லா இலக்கியங்களையும் தள்ளுபடி செய்யவேண்டும் அந்த அளவிற்கு வேதாகமம் பிரதிகளின் உறுதியான அத்தாட்சிகளை உடையதாக இருக்கின்றது.

புதிய ஏற்பாட்டு புத்தகங்கள் கிரேக்க பதிவேடுகளின் மேல் மட்டும் ஆதாரப்படுத்த ப்படவில்லை என்பது உண்மை. இந்த உண்மை மூழ்கி போகட்டும். எல்லா வேதாகமங்களும் மற்றும் எல்லா பழைய பதிவேடுகளும் முற்றுமாக எரிக்கப்பட்டு அழிக்கப்பட்டாலும் நமக்கு உண்மையாக முழ புதிய ஏற்பாடும் திரும்ப கிடைக்கும். காரணம், 80,000 முறை இந்த வசனங்கள் வருணனைகளிலும், பிரசங்கங்களிலும், கடிதங்களிலும் அந்த நாட்களிலிருந்து குறிக்கப்பட்டுள்ளன. 11 வசனங்கள் மட்டுமே தவற விடப்படும். நான் இதைப் பார்க்கும்போது தனிப்பட்ட வகையில் மிகவும் உற்சாகமடைகிறேன். மேலும் 40,000–க்கும் மேற்பட்ட பிரதிகள் புதியஏற்பாட்டு புத்தகங்களை உறுதி செய்வனவாக இருக்கின்றன என நினைக்கும் போது மிகவும் ஆச்சரியமாக இருக்கின்றது. மற்ற பழங்கால எழுத்தாளர்கள் வேதாகமத்திலிருந்து அதிகமாக மேற்கோல்களை எடுத்துக் காட்டியுள்ளனர். இப்படிப்பட்ட ஆரம்பகால எழுத்தாளர்களில் கி.மு.96 ஐ சேர்ந்த க்ளமெண்ட் என்பரும் கி.மு 100 ஐச் சார்ந்த டயாசின் மற்றும் கி.மு. 100–ல் பர்ணபாவின் நிரூபமும் கி.மு 117–ல் இக்னேசியஸ் கி.மு120ல் பாளிகார்ப் என்பவரும் அடங்கும். வேதாகமம் ஒரே மாதிரியான உறுதியான செய்தியை உடையது எப்படிப்பட்ட பழங்கால பதிவேடுகள் இல்லாவிட்டாலும். இந்த புத்தகம் குறைவின்றி எளிதாக திரும்பக் கிடைக்கும்.

## முக்கிய புள்ளிகள்

புதிய ஏற்பாடும் நமக்கு துல்லியமாக கிடைத்துள்ளது (கையளிக்கப்பட்டுள்ளது) என்பதை எட்டு முக்கிய காரணங்களை கொண்டு தொகுத்து அளிப்பதற்கு நான் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்கிறேன்.

## 24,000 பழைய பதிவேடுகள்

இந்த புதிய ஏற்பாடு பழங்கால வரலாற்றிலேயே மிகவும் அங்கீகரிக்கப்பட்டதும்,நிறையப் பிரதிகள் உள்ளதுமாய் இருக்கிறது. மேலும்,பரிந்துரைக்கப்பட்ட பண்டைய பத்து புத்தகங்களை ஒன்றாகத் தொகுத்து அங்கிகாரம் செய்வதைவிட சிறப்பான அங்கீகாரம் பெற்றள்ளது அதுவும் அபிரிமிதமான அளவில் உள்ளது" கி.மு. 300–லிருந்து – 1000க்குள்ளாக ஆயிரக்கணக்கான பதிவேடுகள் நமக்கு கிடைத்துள்ளன. மேலும் கி.மு. 100லிருந்து 300க்குள்ளக நூற்றுக்கணக்கான பதிவேடுகள் நமக்கு கிடைத்துள்ளன. இந்த கணக்கெடுப்பு மற்ற பண்டைய மொழிகளில் மொழி





பெயர்க்கப்பட்டுள்ளன மொழிபெயர்ப்புகளை உள்ளடக்காதது. மொழிப்பெயர்ப்புகளையும் சேர்ந்துப் பாாக்கும்போது பழங்கால பதிவேடுகள் 40000 பிரதிகளாக இருக்கின்றன. இப்படிப்பட்ட மிகப்பெரிய அத்தாச்சியானது பொய்யோ(அல்லது) கட்டுகதையாகவோ உருவாக்கப் பட முடியாது. என்னுடைய கருத்து புதிய ஏற்பாட்டு புத்தகம் மட்டும், உறுதியானது என்பதல்ல நமக்கும் கிடைத்துள்ள வேதாகம் வசனங்கள் அனைத்தும் துல்லியமாக நமக்கு கிடைத்துள்ளது, என்பதே என்னுடைய கருத்து.

## நிகழ்ச்சிகள் நடந்தவுடன் எழுதப்பட்டவை....

புதிய ஏற்பாடு என்பது கண்கண்ட சாட்சிகளின் தொகுப்பு. ரோமர்கள் எருசலேமை அழித்த கி.பி 70–க்கு முன் புதிய ஏற்பாடு முழுவதும் எழுதப்பட்டது என்பது மிகவும் தெளிவாக உள்ளது. ஆரம்ப புத்தகங்கள் எல்லாம் கி.பி 40–ல் எழுதப்பட்டன அதாவது இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த 15 வருடங்களில் எழுதப்பட்டவைகள் வேதாகமம் என்பது முதல் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டது என்பது மறுபடியும் மறுபடியுமாக கூறப்படவேண்டிய ஒன்று.

## ஆயிரக்காண கண்கண்டசாட்சிகள் உயிரோடு இருந்தனர்

தெளிவான முறையில் பரிசோதிப்பவர்கள் துல்லியமற்ற கருத்துகளை அனுமதித்திருக்க மாட்டார்கள். எந்தவிதமான பொல்லாத கதைகளும் பிணைக்கப்படவில்லை.

## அநேக இடங்களில் இருந்த நூலகங்கள் ஒருமைப்பட்டிருந்தன.

அலெக்சாந்திரியா, சிரியா, ரோம், கார்த்தேஜ் மற்றும் கான்ஸ்டன்டைன் ஆகிய இடங்களில் இருந்த எல்லா பதிவேடுகளும் ஒரே மாதிரியாக மாற்றமில்லாமல் வாசிக்கப்பட்டன. தொலைபேசிகளோ,ஃபாக்ஸ் இயந்திரங்களோ இல்லாத காலத்தில் அநேக மைல் தொலைவில் இருந்த நூலகங்களின் கருத்துக்கள் வேதாகமம் துல்லியமானது என்பதில் ஒருமைப்பட்டுள்ளன. இப்படி ப்பட்ட ஒப்பிட்டு சரி பார்த்தல் இந்த புத்தகத்தில் உள்ள, ஒருமைப்பட்ட கருத்தை உறுதி செய்கிறது.

## பழைய லெக்ஷனரிஸ் (Lectionanies) இருந்தன

ஞாயிற்றுக் கிழமை ஆராதனைகளில் ஆரம்பகால திருச்சபைகளில் வேதாகமத்தியிருந்து ஒரு பகுதி வாசிக்கப்படும். முழு புதிய ஏற்பாட்டிற்கு பதிலாக சில நேரங்களில் அவர்கள் ( லெக்ஷனரிஸ்) என்ற அழைக்கப்பட்டவைகளை பயன்படுத்தினர். பொதுவான ஆராதனை நேரத்தில் வாசிக்கப்படும் மிக பிடித்தமான சில வேதாகமம் பாகங்கள் இந்த 'லெக்ஷனரிஸ்' களில் இருந்தன (கி.மு.600–லிருந்து) பாடல் புத்தகங்கள் எப்படி பாடல் பாடுவதற்கு உபயோகப்படுகின்றனவோ அதைப்போல் இவைகள் வேதவாசிப்பிறகு பயன்பட்டன. உலகம் முழுவதிலும் இப்படிப்பட்ட லெக்ஷனரிஸ் 2,200 இருப்பதாக பழங்கால உலக வரலாற்றில் கண்டறியப் பட்டுள்ளது.

## அந்த காலத்தில் இருந்த கடிதங்களிலும் பத்திரிகைகளிலும் மேற்கோளாக கூறப்பட்டவை

இந்த ஒரு உண்மை மிகவும் ஆச்சரியப்படவேண்டிய ஒன்று. எல்லா வேதாகமங்களும் மற்றும் பழைய பதிவேடுகளும் முற்றிலுமாக எரித்து அழிக்கப்பட்டாலும் 11 வசனங்கள் தவிர முழு வேதாகமத்தையும் நாம் திரும்ப பெற முடியும் காரணம் வேதாகம் வசனங்கள் 80,000 முறை வருணைகளிலும், கடிதங்களிலும் மேற்கோள்களாக அந்த காலத்தில் காட்டப்பட்டுள்ளன. எனவே எந்தவிதமான பழங்கால பதிவேடுகளோ அல்லது புதிய வேதாகமமானது இல்லாமல் வேதாகமானது மிகவும் எளிதாகவும், துல்லியமாகவும் இலக்கியங்கலிருந்து திரும்ப கிடைக்கும்.

## ஆரம்பகால மொழிப்பெயர்ப்புகள்

கி.மு. 150முதல் –250 வரையுள்ள கோப்புக்,இலத்தீன் மற்றும் சிரியா மொழிகள் பழங்கால வார்ததைகளாகிய இந்த புத்தகத்தை உறுதியாக்குகிறது. இந்த மொழிப்பெயர்ப்புகள் பழைய பதிவேடுகளின் எண்ணிக்கையை 40,000 ஆக மாற்றியுள்ளது.

## கோயின் கிரேக்கமொழியின் தனித்தன்மை

பல காலங்களாக கோயின் கிரேக்க மொழிக்கு நம்முடைய வேதாகமம் மட்டுமே உதாரணமாக இருந்தது. ஆனால் சமீபத்தில் கிடைத்த பேப்பிரஸ் கண்டுபிடிப்புகள் இதன் நடையையும் உண்மையானது என்பதையும், சொற்களையும் கொடுக்கின்றது. புதிய ஏற்பாட்டில் உள்ள கோயின் கிரேக்க மொழி 5 அல்லது 6 நூற்றாண்டுகளுக்கு பிறகு உருவாக்கப்பட்ட பொய்யான கட்டுக்கதை அல்ல. புதிய ஏற்பாடு என்பது முதலாம் நூற்றாணடு காலத்தின் ஒரு பகுதியாகும்.

நம்முடைய பதிவேடுகள் எல்லாம் உடனே எழுதப்பட்வைகளாகவும், துல்லியமானதாகவும் மிகவும் வல்லமையான பல பிரதிகளின் மூலமாக பரிந்துரைக்கப்பட்டுள்ளன. புதிய ஏற்பாட்டின் ஒருமைப்பாடு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டது. மறுமதிப்பு பெற்ற வரிகள் எல்லாம் முழுவதும் நம்பிக்கைக்கு உரியவை புதிய ஏற்பாடானது உண்மையானது என்பதற்கு உரிய எல்லா பரிட்சைகளையும் தாண்டி வெற்றி நடைபோடுகின்றது. கடைசி இரண்டு நூற்றாண்டுகளும் திறனாய் வாளர்களின் வாயை அடைக்கும்படி அனேக ஆரோக்கியமான அத்தாட்சிகளை உருவாக்கியுள்ளன. நீங்கள் புதிய ஏற்பாட்டை படிக்கும் போது அதிலுள்ள வார்த்தைகள் யாவும் எழுத்தாளர்கள் பயன்படுத்திய அதே வார்த்தைகள் என்பதை உறுதியாக உணரமுடியும். இரண்டு நூற்றாண்டுகளாக வேதாகமம் அதன் உறுதித்தன்மையில் சந்தேகம் கொள்ளப்பட்டதாக இருந்து வந்தது – காரணம் திறனாய்வாளர்களின் யூகங்களும், கருத்துக்களும் அப்படிப்பட்ட சந்தேகத்தை ஏற்படுத்தி வந்தன. ஆனால் பாதிப்பு உண்டாக்க நினைத்த திறனாய்வாளர்கள் தங்களை தவறானவர்கள் என்று நிரூபித்தனர்.





பிரிட்டிஷ் அருங்காட்சியக நூலகத்தின் முதல்வரும் பதிவேடுகளை குறித்த விஷயங்களை வெளிப்படுத்துவதில் முழு அதிகாரம் படைத்த இரண்டாம் நபருமான ஸர்பிரடெரிக் கென்யான் என்பவர் பின்வருமாறு கூறுகின்றார்.

“வேதாகம முல படிவங்கள் எழுதப்பட்ட காலத்திற்கும் நகல்கள் எடுக்கப்பட்ட காலத்திற்கும் இடைப்பட்ட காலம் மிகவும் குறுகியது ஆகையால் இவை உண்மையானது என்பதற்கு தடை எதுவும் இல்லை வேதாக வசனங்கள் அவைகள் எழுதப்பட்ட பிரகாரமாகவே நமக்குக் கிடைத்துள்ளன. என்பதற்கு எதிரிடையாக இருந்த கடைசி காரணமும் நிராகரிக்கப்பட்டது. புதியஏற்பாடானது உண்மையான காலகட்டத்தையும் போதுவான ஒருமைப் பாட்டையும் பெற்று இறுதியாக வெளியிடப்பட்டது.”

வேதாகம உண்மைகள் நம்மிடம் துல்லியமாக வந்து சேர்ந்துள்ளன என்பதில் சற்று தயக்கம் காட்டக் கூடிய கிறிஸ்தவர்களை நான் கண்டிருக்கிறேன் அவர்கள் ஒரு வெள்ளாட்டைப்போல் சிரித்து கொண்டு அவர்கள் வேதாகமத்தை நம்புகிறார்கள் என்றும் அவைகள் துல்லியமாக முதல் நூற்றாண்டு வார்த்தைகளை உடையனவாக இருக்கின்றன என்றும் கூறுவர். பலர் இதை உணராமல் இருந்தாலும் புதிய ஏற்பாடானது பல நூற்றண்டுகளாக தனக்கு எதிரிட்டு வரும் எல்லா எதிரிப்புகளையும் தாங்கிக் கொண்டு ஒரு கோட்டையைப் போல உறுதியாக நிற்கிறது பரிகாசங்களுக்கு அடியில் மாட்டி சிதைத்து போவதற்கு பதில் புதிய ஏற்பாடனாது மிகவும வல்லமையுள்ளதாக திகழ்கிறது. வேதாகமத்தின் ஒருமைப்பாட்டை நம்புகிறவர்களுக்கு ஆயிரக்கணக்கான பழங்கால பதிவேட்டு அத்தாட்சிகள் இவைகளை உறுதிப்படுத்துபவைகளாக இருக்கின்றன. கிறிஸ்தவர்கள் வேதவசனங்களில் உறுதியானவர்களாக இருக்க முடியும். நீங்கள் புதிய ஏற்பாட்டை படிக்கும் போது அதன் ஆசிரியர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக எழுதிய அதே வார்த்தையை தான் படிக்கிறார்கள் எனவே ஒரு சீடன் தயக்கமடைய வேண்டியதில்லை. தயக்கமடைய வேண்டிய காரியத்தை வேதாகமத்தை பாதிக்கும் படி எழுதிய பழங்கால திறன் ஆய்வாளர்களுக்கு விட்டுவிடுங்கள்.

# அத்தியாயம் - 4

## புத்தகங்களிலுள்ள வேறுபாட்டை குறித்து என்ன ?

மேற்கூறப்பட்டது போல் புதிய ஏற்ப்பாட்டின் மூலப் படிவங்கள் தொலைந்து விட்டன. நமக்கு இப்போது இருப்பவை எல்லாம் பல நூற்றாண்டுகளில் சபைகளின் வழியாக நமக்கு கையழிக்கப்பட்ட நகல்களே ஆகும் இந்த நகல்கள் பிழை நிறைந்தவைகளாக உள்ளன. வேதபாரகர்கள் பிழைகளாக உறுவாக்கினர். எந்த மனிதனின் கையும் பூரணமாக எழுதும் திரம் படைத்தது அல்ல சில திரணாய்வாளர்கள் மிக துரிதமாக அதை கோடிட்டு காட்டியுள்ளனர் மேலும் கிரேக்க பதிவேடுகள் அவ்வளவு தெளிவாக ஒப்புக்கொள்ளப் படவில்லை வார்த்தைகளும் குறியிடுகளும் மாறி அமைந்துள்ளன. எவ்வளவு பிழைகளை பற்றி நாம் பேசப்போகிறோம். ஒரு வல்லுனர் 200,000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் இப்படியாக கணிக்கிறார் அதாவது 300,00க்கும் மேற்பட்ட வேறுபாடுகள் புதிய ஏற்பாட்டில் உள்ளன என்று கூறுகிறார். ஆம் சரியாக 300,00 வேறுபாடுகள் நீங்கள் கண்டுபிடித்து வாசிக்கமுடியும்.

இந்த கணக்கு சரியானது என்று நான் ஏற்றுக் கொள்ள வேண்டுமா ? நான் நினைக்கிறேன் ஒரு வேலை குறைவாகக் கூட இருக்கலாம் இது வேதாகமத்தின் மேல் உள்ள என் நம்பிக்கையை அசைக்குமா ? ஒரு நாளும் இல்லை நான் இதை சற்றே விளக்கட்டும் ஏனென்றால் தேவன் மூலப் படிவங்களில் எழுதும் படி ஏவின படியால் நகல்கள் எல்லாம் அக்கரையோடும் கவனத்தேடும் எடுக்கப்பட்டன. ஆனால் அது மனிதர்களால் கையாளப்பட்டது. நகல் எடுப்பவர்கள் துல்லியமாகவும் கருத்து ஒருமித்தும் எடுக்க முடியும் சிலப் பிழைகள் அவர்கள் செய்திருக்கிறார்கள். ஒரு வேதபாரகன் தன் எழுகோலை எடுக்கும் போதெல்லாம் ஒரு அதிசயத்தை செய்யவில்லை. பிழைகள் நடத்திகின்றன. நாம் இதை நிதானிப்போம். புத்தங்களிலுள்ள வேறுபாடுகள் என்று இந்த பிழைகளை அழைப்பவர்கள் அட்டவணையில் ஒவ்வொரு நூற்றாண்டை சார்ந்த ஒவ்வொரு கிரேக்க பதிவேட்டில் உள்ள ஒவ்வொரு வித்தியாசத்தையும் எண்ணிப்பார்க்க வேண்டும் அவைகள் எல்லா பதிவேடுகளிலும் திரும்பு திரும்ப வந்திருந்தாலும் எண்ணிக்கைக்கு உட்படும். இப்பொழுது' ஏறத்தாழ 24,000 பழங்கால கிரேக்க பதிவேடுகள் ஏற்கனவே அட்டவனைப் படுத்தப்பட்டுள்ளன. மேலும் இந்த வேறுபாடுகள் எந்த அளவிற்கு கூடுதலாகும் என்பதை நீங்கள் பார்க்க முடியும். எந்த அளவிற்கு அதிகமாக பழங்கால பதிவேடுகள்





கண்டுபிடிக்ப்பட்டு அலசிப் பார்க்கப்படுகின்றதோ அந்த அளவிற்கு வேறுபாடுகள் தொடர்ந்து வளர்ந்து கொண்டே இருக்கும்.

பதிவேடுகள் குடும்பங்களைப் போல ஒன்று சேர்ந்து வளந்தவை, ஆதிக் காலத்துப் பதிவேடுகள் எல்லாம் மிகப் பெரிய சபைகள் நிருபப்பட்ட இடங்களான வித்தியாசமான பட்டணங்களில் நகல்களாக எடுக்கப்பட்டன. ரோம் கான்ஸ்டான்டி நோபில் அந்தியோக்கியா அலெக் சான்டிரியா உதாரணமாக மிக முக்கியமான நூலகங்கள் இந்த பதிவேடுகள் எல்லாம் நகல்கள் எடுக்கப்பட்டபோது ஒவ்வொரு நூற்றாண்டுகளிலும் பல பிழைகள் நுழைந்துள்ளன. சில நேரங்களில் சில பிழைகள் ஆரம்பத்திலிருந்தே தொடர்ந்து வந்துள்ளன. ஒவ்வொரு முறையில் ஒரே பிழை தொடர்ந்தது.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் அறிஞர்கள் வெஸ்ட்காட் மற்றும் எஃப் ஜெ.ஏ. ஹோர்ட் ஆகிய இருவரும் கிரேக்க புதிய ஏற்பாட்டை நன்கு கற்றறிந்தவர்கள். அவர்களது கருத்துப்படி ஏறக்குறைய எல்லா வார்த்தை வேறுபாடுகளும், “முக்கியத்துவமற்றவை” என்ற பிரிவையே சேருகின்றன. மிகப்பெரிய வேறுபாடு என்று எதை நாம் குறிக்கக் கூடுமோ அவை மொத்த கருத்து மாறுபாட்டின் ஒரு சிறிய பகுதியாக மட்டுமே இருக்கின்றது. அதாவது மொத்த கருத்துக்களின் தொகுப்பில் ஆயிரத்தில் ஒரு பகுதிக்கும் குறைவான வார்த்தைகளே வேறுபாடு உள்ளவை எனக் கருதப்படுகின்றன.

“ஒரு கையெழுத்துப் பிரதியின் வாாத்தைகள் வேறுபாடுள்ளவை எனக் கருதப்படும் போது அவை பண்டைய கையெழுத்துப் பிரதிகளுடன் ஒப்பிடப்பட்டு எது இறுதியான வார்த்தை எனத் தீர்மானிக்கப்படும் 99% இவ்வாறு வேறுபாடுகள் சரிசெய்யப்பட்டுள்ளன. எஞ்சியவை முக்கியத்துவமற்ற வேறுபாடுகளாகக் கருதப்பட்டு வேதாகமத்தில் குறிப்புகளாக சேர்க்கப்படுகின்றன. நாம் சுருங்கச் சொன்னால் கையெழுத்துப் பிரதிகளில் உள்ள வார்தை வேறுபாடுகள் மிகவும் முக்கியத்துவமற்றவைகளே என்கிறார் டாக்டர் டக்ளஸ் ஜேக் கோபி.

வாாத்தை வேறுபாடுகள் மிகச் சிறியவையாகவும் முக்கியத்துவம் அற்றவையாகவும் இருக்கின்றன. ஆனால் கண்கண்ட சாட்சிகளின் தெளிவான சான்றுகள் புதிய ஏற்பாட்டில் துல்லியமாக நமக்குக் கிடைத்துள்ளது. அந்த சாட்சிகளின் வார்த்தைகள் ஏற்றுக் கொள்வதும், புறக்கணிப்பதும் உங்கள் முடிவு. நேர்மையாக தேடும் இதயம் கொண்டவர்கள் “வார்த்தை வேறுபாடுகள்” என்று சந்தேகம் கொண்டு உண்மையைத் தவற விட மாட்டார்கள். புதிய ஏற்பாடு துல்லியமாக உள்ளது. எந்த வித கபடுமின்றி புதிய ஏற்பாடு நமக்கு கிடைத்திருக்கிறது. அதை நாம் மதித்துப் போற்ற வேண்டுவது மட்டுமல்லாமல் அது நம் இதயத்தில் சத்தியத்தின் ஒளியை சுடரவைக்கும் சக்தியுள்ளதாயும் இருக்கிறது. நடைமுறையில் இந்தத்தவறுகளால் வசனத்தின் பொருள் மாறுபடவில்லை. சிலவேளைகளில் எழுத்துப் பிழைகள் ஏற்பட்டது. சில தவறுகள் வார்த்தை வரிசை மாறியதால் ஏற்பட்டது. மூலப்படிவத்தைப் பார்த்து வேதாகமத்தை எழுதியவர் “இயேசு கிறிஸ்து” என்று

வாசித்து விட்டு "கிறிஸ்து இயேசு" என்று எழுதியிருக்கலாம். சில வேளைகளில் ஆக அல்லது "மேலும்" என்று சில வார்த்தைகள் விடுபட்டன, அல்லது சேர்க்கப்ட்டன. சில சமயங்களில், வசனத்தை எழுதுபவர் அவர் காலத்தில் வழக்கத்திலிருந்த கிரேக்க எழுத்துக்களையொட்டி வார்த்தைகளின் எழுத்துக்களை மாற்றி அமைத்தார். (கடந்த நூறு ஆண்டுகளில் ஆங்கில எழுத்துக்கள் எவ்வளவு மாறியிருக்கின்றன என்று எண்ணிப்பாருங்கள்) புதிய படிவங்களை பழைய படிவங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இத்தகைய தவறுகள் எளிதாகக் கண்டுபிடிக்கப்பட்டு நிவர்த்தி செய்யப்படுகின்றன. பெரும்பான்மையான தவறுகள் இந்த வகையைச் சார்ந்தவையே.

திரும்பப் பார்க்கும் போது அறிஞர்கள் இத்தகைய தவறுகளை சுலபமாக அடையாளம் கண்டு திருத்தியுள்ளனர். இதைப்பற்றி விளக்கமாக நாம் விவாதித்த போதும் விசுவாசத்திற்கு அடிப்படையான எந்த பத்தியும் இத்தகைய வார்த்தைப் பிழைகளால் ஏற்படவில்லை. விசுவாசத்தைப் பற்றியோ பிழையுள்ளதாக கண்டுபிடிக்கப்படவில்லை, எந்த தேவ கட்டளையும் சரியானதா என்ற கேள்வி எழவில்லை. வேதாகமத்தன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளையும் விளக்கங்களையும் வாசித்தால் நாம் எவ்வளவு உறுதியான வேத வாக்கியங்களின் மீது நமது நம்பிக்கை ஊன்றி நிற்கிறோம் என்பது தெளிவாக விளங்கும்.





# அத்தியாயம்- 5

பழைய ஏற்பாட்டு வார்த்தைகள் எவ்வளவு துல்லியமானது ? கடந்த சில நூற்றாண்டுகளாக புதிய ஏற்பாடு நிரூபிக்கப்பட்டு வந்த விதம் மிகவும் உற்சாகமாயிருந்தது. ஆனால் பழைய ஏற்பாட்டைப் பற்றி என்ன ? அது எவ்வளவு துல்லியமாக பாதுகாக்கப்பட்டு வந்தது.

நீங்கள் ஒரு வேதாகம நிபுணரை 1946–ல் உங்களது சிறந்த புதை பொருள் ஆராய்ச்சி கண்டுபிடிப்பு என்னாவாக இருக்க வேண்டும் என்று கேட்டிருந்தால் அவர் பழைய ஏற்பாட்டு நூல்களையும் கையெழுத்து பிரதிகளையும் உறுதிப்படுத்தும் சான்றுகள் கிடைக்கவேண்டும் என்று சொல்லியிருப்பார். யூதர்கள் மிகக் கடுமையாக உழைத்து பழைய ஏற்பாட்டு வார்த்தைகளை பாதுகாக்க எல்லா முயற்சிகளையும் எடுத்தனர். வேதாகம புத்தகங்களின் துல்லியத் தன்மைகளை உறுதிப்படுத்து விற்காக சந்ததிகள் தோறும் அநேக வேதனை நிறைந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன . அவர்கள் மேலும் கிழிந்த மற்றும் கரைபட்ட பிரதிகளை அழித்து வந்தார். பல ஆண்டுகளாக தேவாலத்தில் தேவனுடைய வார்த்தை சுருளை பயன்படுத்திய பிறகு கிழிந்து போன நூலை அழித்தார்கள். பள்ளிகளுக்கும் சுருள்களை உபயோகத்திற்காக அனுப்பி வைத்தனர். ஏதோ ஒரு வழியில் பழைய ஏற்பாட்டு வார்த்தைகள் ஒரு வேளையால் அழியும் நிலைக்குவந்தது. அப்பொழுது பழைய ஏற்பாட்டு மனிதர்கள் அதனை மரியாதையுடன் அடக்ககும் செய்து வந்தார்கள்.அவர்கள் அப்படிப்பட்ட மூட நம்பிக்கையே தேவனுடைய வார்த்தையின் மேலும் அது எழுதப்படடிருந்த பொருளின் மேலும் வைத்திருந்தார்கள்.

அவ்வாறு தான் பழைய ஏற்பாட்டு துல்லியமானது என்கிற நம்பிக்கையும் எழுந்தது. எப்படியிருப்பிதும் பழைய ஏற்பாட்டின் துல்லியத்தன்மையின் மிதான நம்பிக்கைக் குறைவும் ஏற்பட்டது. வேத நிபுணர்கள் கி.பி.900 முதல் கி.பி 1000 வரையிலானதேதியிட்ட கைப்பிரதிகளைக் கொண்டு ஆராய்சிகளைத் தொடங்கினார். இந்த பிரதிகள் துல்லியமானதாது பழைய ஏற்பாட்டில் எவ்வளவு மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும்? வேதாகமானது 1000 ஆண்டுகளாக கி.மு 1400 முதல் கி.மு 400 (மல்லியா) எழுதப்பட்டு வந்நது என்பதை நினைவு உற வேண்டும். கடைசியாகக் கிடைத்த பிரதி கி.பி 925–ம் ஆண்டைச் சேர்ந்ததாகும். இதற்கிடையில் 1300வருட இடைவெளி இருந்தது. வார்த்தைகள் அழிக்கப்பட்டனவாமூ ப்ளாட்டோ அல்லது அரிஸ்டாட்டில் இவர்களின் கருத்தின் படி வேதாகமம் நன்றாகவே இருந்தது. இருப்பினும் இரண்டாம் உலகப்போருக்கும் பின் பழைய ஏற்பாட்டைப் பற்றிய வெளிப்படையான நிரூபணம் ஆரம்பமானது. மிகப் பெரிய புதைபொருள் கண்டு பிடிப்பாக கடந்த நூற்றாண்டில் "சவக் கடல் சுருள் கருதப்பட்டது.

## கடந்த நூற்றாண்டின் கண்டு பிடிப்பு

1947–ல் இஸ்ரேல் மற்றும் ஜோர்டான் எல்லையில் பிடோயின் மேய்வன் ஒருவன் ஒரு குன்றின் அடிவாரத்தில் தன் விலங்குகளை மேய்த்துக் கொண்டிருந்தான். அங்கே சில குகைகள் இருந்தன. ஆகையால் அந்த இளம் மனிதர் கல்லுகளை எடுத்து ஒன்றன் பின் ஒன்றாக குகையினுள் எறிந்தான் அந்தக் கல் குகையினுள்ளேயே சுழலும் என்று எதிர்பார்த்தான். ஆனால் அதற்கு மாறாக ஒரு பானை உடையும் சப்தத்தை அவன் கேட்டான். பானையில் புதைபொருள் இருக்கும் என்பதை அந்த இளைஞன் அறிந்து அவன் நண்வர்களுடன் சேர்ந்து அதை ஆராய முற்பட்டார்கள்.

நூற்றாண்டின் கண்டுபிடிப்பு

1947– அப்போதிருந்த இஸ்ரவேலுக்கும் யோதானுக்கும் இடைப்பட்ட எல்லையில் ஒரு பொலோயன் மெய்ப்பன் தான் மிருகங்ககளை ஒரு மலை அடிவாரத்தில் மேய்த்துக் கொண்டிருந்தான் அங்கே சில குகைகள் இருந்தன அந்த வாழிபன் ஒரு கல்லை எடுத்தான் அதை ஒரு குகையின் வாயிலை முடுடினான் அப்படி செய்யும் போது மிகப் பெரிய ஒரு சத்தத்தைக் கோட்டான். அது பானைகள் உடைவது போல கேட்டது. இந்த வாலிபன் அகழ்வராய்ச்சியின் விரும்பம் உடையவன் பானைகளை குறித்தும் சிற்பப வேலைகளை குறித்தும் அவனுக்கு அதிக நாட்டம் இருந்தபடியால் அவனும் அவனது நண்பர்களும் அதைக் குறித்துப் பார்க்கும்படி மேல ஏறிச் சென்றனர் அவர்கள் சென்று பாாத்த போது சில உடைந்த மண் ஜாடி களையும் அதினுள் இருந்த பழங்கால சுருள்களையும் கண்டனர் அவைகளை அவர்கள் எடுத்து வந்து எருசலேமில் உள்ள பழைமை வாசிகளாக வியாபாரினிடத்தும் அகழ்வராய்ச்சியாளர்களிடத்திலும் காண்பிடித்தார்கள் இந்த காரியம் அந்த இடத்திலுள்ள எல்லா குகைகளையும் முழுவதுமாக ஆராய்ச்சி செய்வதற்கு ஏதுவாக அமைந்தது.

தொடர்ந்து வந்த வாரங்களில் 200 சுருள்களும் 40,000 எழுதப்பட்ட உடைந்த பகுதிகளும் 11 வித்தியாசமான குகைகளும் கண்டு பிடிக்கப்பட்டன. அநேக சுருள்கள் வேதாகமப் பகுதிகளாக இருந்தன. எஸ்தர் புத்தகத்தைத் தவிர எல்லா பழைய ஏற்பாட்டு புத்தகங்களும் இந்த கண்டுபிடிப்பில் கிடைத்தன. மற்ற சுருள்கள் எல்லாம் வேதாக தலைப்புகளை பற்றி மத உபதேசங்களை சார்ந்தவைகளாக இருந்தன. இந்த மெய்பன் தற்செயலாக எருசலேமிற்கு வெளியே உள்ள கும்ரன் இனத்தவரின் மிகப் பழைமையான நூலகத்தைக் கண்டுபிடித்தான் கும்ரன் இனத்தவர் அந்நாட்களில் நடைமுறைப் படுத்தப்பட்ட மதவாத காரியங்களை குறித்து சந்தோசம் இல்லாமல் இருந்தனர். வணாந்தரத்திற்கு சென்று குடியிருப்புகளை உருவாக்கி அங்கே சிறப்பான ஒரு நூலகத்ந்தயும் நிறுவினர். அந்த நூலகம் தான் அகழ்வராய்ச்சியாளர்கள் அனைவரும் மிக மகிழ்ச்சியோடு சென்று பார்வையிட்ட ஒரு நூலகமாகும். இந்த சுருள்கள் எல்லாம் கிடைத்தற்கரிய மிகவும் பழைமை வாய்ந்தவை என்று தெளிவாக அறியப்பட்டது. எருசலேமிலும் ஐரோப்பாவிலும் உள்ள நூலகங்களிலும் கண்காட்சியகங்களிலும் வைக்கப்பட்டிருந்த பழைய ஏற்பாட்டு பதிவேடுகளை பார்க்கிலும் இந்த





சவக்கடல் சுருள்கள் 1000 ஆண்டுகளுக்கு முற்தினவை இவைகள் கிறிஸ்துவிற்கும் 200 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்று தேதி இடப்பட்டுள்ளன வரலாற்றில் பின் நோக்கி போகும் ஒரு காரியமாகும்.

இப்பொழுது இந்த பழைய நகல் எடுப்பவர்கள் இவைகளை பரிசோதித்துப் பார்ப்பர் வேதாகச் சத்தியங்கள் எந்த அளவிற்கு பாதுகாக்கப்பட்டுள்ளன. நகல் எடுத்தவர்கள் எந்த அளவிற்கு துல்லியமாக எடுத்துள்ளனர். யூத மாசேரட்டஸ் என்று அழைக்கப்பட்டவர்கள் பழைய ஏற்பாட்டு புத்தகத்தை மிகவும் கவணமாகவும் துல்லியமாகவும் பாதுகாத்தனர். பழங்கால பதிவோடுகள் போலவே சவக் கடல் சுருள்களும் ஒன்றை ஒன்று ஒத்திருந்தன சில தலைப்பு செய்திகள் வேதாகமம் மறுபடியும் எழுதப்பட வேண்டும் என்று முன்னறிவித்தாலும் அதனுடைய விளைவு ஒரு நாடகத்தைப் போல இருந்தது வேதாகமம் முழு சிறப்பு வாய்ந்ததாக இருந்தது. அநேக காலங்கள் கடந்து நகல்கள் எடுத்தாலும் இந்த புத்தகங்கள் எப்படி துல்லியாக நகல் எடுக்கப்பட்டது. இதற்கு பதில் யூத மாசோரட்டஸ்களின் மிக கடினமான பண்பாட்டை பின் பற்றும் வகைகள் அமைகிறது. தொன்று தொட்டு வரலாறு காலத்தில் ஒரு பதிவேட்டை நகல் எடுக்கும் போது ஒரு எழுத்து தவறினாலும் அதற்கு கூடுதலாக ஒரு பதிவேட்டில் குறிக்கப்பட்டாலோ வேதபாரகனின் தலைவன் அந்த பூரணமில்லாத நகலை உடனே அழித்து விடுவான் துல்லியமாக இருப்பதைக் குறித்து அவர்கள் மிகவும் எச்சரிக்கையாகவும் உற்சாகமாகவும் இருந்தனர். யூதர்கள் எந்த ஒரு ஆவனத்தையும் பாதுகாப்பதை விட பழை ஏற்பாட்டு புத்தகத்தை மிகவும் கவனமாக பாது காத்தனர். ஒவ்வொரு பதிவேட்டிலும் அவர்கள் ஒவ்வொரு எழுத்தையும் சொல்பிரிவுகளையும் வார்த்தைகளையும் பத்திகளையும் எண்ணி வைத்தனர். ஒரு பதிவேடு ஒப்புக்கொள்ளப்படுவதற்கு முன்பு எல்லா எழுத்துக்களும் பிரிவுகளும்,வார்த்தைகளும் பத்திகளும் எண்ணப்பட்டு உறுதியாக்கப்பட வேண்டும். வேதபாரக்கள் சட்ட நிபுணர்கள் மற்றும் புத்தக நிபுணர்கள் தங்களுடைய முழு நேரத்தையும் துல்லியமாக மறு பிரதி எடுப்பதில் செலவு எடுத்தனர். அவர்கள் வெற்றியும் அடைந்தனர்.

கும்ராணில் பதிவேடுகள் நகல் எடுப்பதற்கென்றே இருந்த ஓர் அறை கண்டு பிடிக்கப்பட்டது. அது "வேதாகம அறை" என்று அழைக்கப்பட்டது. உடைந்த பானைத் துண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டன. அவைகளின் மேல் வேதபாரர்கள் கையெழுத்துப் பயிர்ச்சி செய்திருந்தனர் நூலகங்களுக்கு பதிவேடுகள் எழுதுவதற்கு முன்பு அவர்கள் தங்களை தயார் படுத்திக் கொள்ளும்படி உடைந்த மண்பாண்டங்களின் மேல் கையெழுத்துப் பயிர்ச்சி செய்தனர். துல்லியமாக எழுதவேண்டுமென்பது அவர்களுக்கு மிகவும் பிடித்தமான ஒன்று மிகவும் இந்த விருப்பமும் துல்லியமாக எழுதுவதற்கு அவர்களுடைய நெடு நாளைய பாரம்பரியத்தின் ஒரு பங்காகும்.

உதாரணமாக பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து புத்தகங்களின் ஏரத்தாழ அரை மல்லியன் எழுத்துக்கள் உள்ளன. சவக் கடல் சுருள்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின்பு இந்த ஐந்து புத்தகங்களின்லுள்ள கடைசி நகல்களிலுள்ள 169 எழுத்துக்கள் சந்தேகத்திற்கு உறியவைகளாக

உள்ளன. ஆச்சரியப்படும் படியாக 500,000 எழுத்தக்களில் 169 எழுத்துக்கள் கேள்விக் குறியாக நிற்கின்றன. இவைகளில் அநேகம் வேறுபட்ட எழுத்துக்களையும் அல்லது வார்த்தைகள் திரும்ப வருவதையும் பார்க்கிறோம் ஆனால் எந்த நிகழ்ச்சியும் சம்பவங்களும் போதனைகளும் இதனால் பாதிக்கப்படவில்லை

ஏசாயா தீர்க்கதரிசனத்தின் சுருள் இப்படி பட்ட கருத்தை நிருபணம் பண்ணுகிறது மிகுந்த கவனமான ஆராய்ச்சிக்கு பின்பு 1952– பதிப்புறைகள் உறுதிப்படுத்தப் பட்ட வேதாகம வெளியீடின் மூலமாக வெளியிடப் பட்டிருந்தும் இந்த புத்தகத்தில் 13 சிறிய மாற்றங்களே அமைந்துள்ளன. இதைக்குறித்து "ஜான்ஒக்ஸ் என்பவர் கூறும்போது 1000 வருடங்களுக்கு பிறகும் 13 மாற்றங்கள் அடங்கிய வேதாகமத்தின் 2வது மிகப் பெரிய புத்தகம் உறுவாக்கப்பட்டுள்ளது என்று கூறுகிறார்."

சுருள்களெல்லாம் உண்மையாக ஒன்றுக் கொன்று பழைய ஏற்பாட்டு புத்தகங்களோடு 1000 வருடங்களுக்கு பிறகும் ஒத்துப் போகிறது பழைய ஏற்பாடு துல்லியமாக பாதுகாக்கப்பட்டது. என்பதற்கு இந்த சுருள்கள் முக்கிய ஆதாரங்களாக இருக்கின்றன. இவைகள் ஜிக்ஸா புஸ்ஸல் (Jig-saw Puzzle) என்பதில் ஒரு துண்டாக இருந்து வேதாகமத்தின் ஒருமை பாட்டை உறுதிபடுத்துகிறது. F.F புரூஸ் சொல்லுகிறார். "புதிய ஆதாரங்கள் நாம் ஏற்பனவே நம்பி இருந்தவைகளை உறுதிபடுத்துகின்றன. அதாவது முதல் நூற்றாண்டு காலத்து யூத வேதபாரகர்கள் எபிரேய வேதாகமத்தில் எல்லா நோக்கத் தோடும் உண்மையோடும் நகல்களையும், பிரதி நகல்களையும் எடுத்தனர்.

அநேகம் எதிர் மறையான திரனாய் வாளர்கள் வேதாகமத்தை நம்பலாம் என்கிற அளவிற்க வந்திருக்கின்றனார். இன்றைக்கு நாம் வாசிப்பது மூலம் படிவத்தில் துல்லியமான நகலாகும். மேலும் இயேசு கிறிஸ்துவிற்கு அநேக நூற்றாண்டுகளுக்கு முன்பாக எழுதப்பட்ட பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் உறுதியாக்கப்பட்டிருட்டவை மிகவும் கவனத்திற்குரியதாக கருதப்படுகிறது. சவக்கடல் சுருள்கள் வேதாகம உண்மைகள் பழைய ஏற்பாட்டு புத்தகம் துல்லியமானது என்பதை நிரூப்யிப்பது போலவே பழைய ஏற்பாட்டை சோதிக்கும் கருத்துக்களும் உள்ளன.

1. செப்டுவாஜின்ட் என்பது எபிரேயமத்தகத்தின் கிரேக்க மொழி பெயர்ப்பாகும். கிறிஸ்துவிற்கு முன் 250 ஆண்டுகளின் முடிக்கப்பட்ட எபிரேய புத்தகம் செப்டுவாஜின்ட்டால் நிரூபிக்கப்பட்டது. பாரம்பரியத்தின் படி 72 மூப்பர்கள். எருசலேமிலிருந்து அலெக்சாண்டிரியாவுக்கு எகிப்திற்கும் மொழி பெயர்ப்பில் உதவி செய்யும்படி அனுப்ப பட்டனர். இது அலெக்சாண்டிரியாவில் வாழுந்து வந்த யூத வம்சம் எபிரேய பாஷயை பயன்படுத்தாமல் இருந்ததினால் அப்பொழுது புகழ்பெற்று இருந்து கிரேக்க பாஷையில் வேதாகம நகல்களை பெற வேண்டும் என்று விரும்பினார்.மூட்டாள்கள் எதிர்பார்த்தது போலவே. இந்த வேலையை 72 நாட்களில் செய்து முடித்தனா் என்று புதிய ஏற்பாட்டின் பரவலாக மேற்கோல் இடப்பட்டுள்ளது. மேலும் இது எபிரேய புத்தகத்தில் நம்பிக்கைக்குறியதாக உறுதிபடுத்தபிறது.



2. முதல் மற்றும் இரண்டாம் நூற்றாண்டு எழுத்தாளர்கள் பழைய ஏற்பாட்டை அதிகமாக மேற்கோள் காட்டி எழுதியுள்ளனர். ஆரிறின் என்பவர் முழு செப்ட்டுவாறின் மறுபடியும் மொழியாக்கம் செய்தார் ஜோசப்பல், பிலே, மற்றும் அநேகர் மிகவும் அதிகமாக பழைய ஏற்பாட்டை மேற்கோல் காட்டியுள்ளனர். இவையனைத்தும் பழைய ஏற்பாட்டை புத்தகங்களை உறுதி செய்கின்றனர்.

3. சமாரியர்களின் பஞ்சாகங்கள் கிறிஸ்துவிற்கு முன் 400 ஆண்டுகளில் எழுதப்பட்டவை என்ற தேதியிடப் பட்டுள்ளன. இது சமாரியர்களால் பாதுகாக்கப்பட்ட பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து புத்தகங்களை கொண்டது எபிரேய மொழியிலிருந்து அராமிக் மொழியால் மொழி பெயர்க்கப்பட்டிருந்த மொழியாக்கம் தான் இது மிகச் சிறிய இலக்கண வேறுபாடுகள் இருந்தாலும் இந்த மொழியக்கம் பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து புத்தகங்கள் ஒட்டு மொத்த உறுதியை கூறுகின்றது.

4. அராமின் விரிவுரைகள் கி.பி.150–லிருந்து பழைய ஏற்பாட்டை அதிகமாக மேற் கோள்காட்டுகிறது.

5. ஒரு ஜோடி வெள்ளி சுருள்கள் (ஏரத்தாழ கி.மு. 750) 1979 ஆம் ஆண்டு எருசலேமில் ஒரு கல்லரையில் அகல்வராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டது இந்த சுருள் எண்ணாகவும் அதிகாரம் 24–26 வரையுள்ள வசனங்கள் உடையதாக உள்ளது இந்த சுருளை உடைக்காமல் எப்படி திறப்பது என்று கண்டுபிப்பதற்கு அவர்களுக்கு மூன்று வருடங்கள் பிடித்தது. அவர்கள் அதை திறந்து பார்த்த போது அதிலிருந்த வேதாகம பாகம் எல்லாருக்கும் நன்கு அறிந்ததாக இருந்தது. இது 18 நூற்றாண்டை சார்ந்த படியால் இன்றைக்கு இருக்கின்ற வேதாகம வார்த்தைகளை போல அவை இருந்தன. இது தோமாவைப் போல் சந்தேகப் படுகின்ற அநேகர் புதிய ஏற்பாட்டு புத்தகங்கள் உரைக்கப்பட்டுள்ள சம்பவங்கள் நடந்து முடிந்தவுடன் எழுதப்பட்டவை என்பது அவர்கள் நம்பும் படியாக வைத்தது.

இப்படியே நாம் போய்க் கொண்டே இருக்காலம். வேதாகமம் நம்பத்தகுந்தது என்பதற்கு ஆதாரணமாக அநேக புத்தகங்கள் எழுதப்பட்டன இறுதியான ஒரு கருத்து என்ன வென்றால் நீங்கள் வேதாகமத்தை திறக்கும் போது அதில் எழுதியுள்ளதை அப்படியே வாசிக்கிறீர்கள் அநேக காலங்களாக தேவன் வேத வசனங்கள் நமக்கு முழுமையாக கிடைத்துள்ளன என்பதை தேவன் கான்கிறார். வேதாகமத்தை நாம் நம்பிக்கை யோடு திறக்கும் போது அது அநேக நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த எழுத்தாளர்களை எழுதப்பட்டது என்று விறைந்து வாசிக்கின்றோம் பிரிட்டிஷ் அருங்காட்யத்தின் நூலகத்தின் இயக்குனரும் முதல்வருமான சர். பிரிட்ரிக் கென்யான் அவர்களின் கருத்தை மறுபடியும் கூறுகின்றேன். "ஒரு கிறிஸ்த்தவன் முழு வேதாகமத்தை தன் கையில் எடுத்துக் கொண்டு எந்த வித பயமும், தயக்கமுமின்றி தன்னிடமிருப்பது தேவனுடைய உண்மையான வார்த்தை என்றும் அநேக நூற்றாண்டுகளுக்கு பிறகு பல தலைமுறைகளைத் தாண்டி எந்தவிதமான தேவையான இழப்பும் இன்றி தனக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்று கூறவேண்டும்.